# ஸ்ரீ குமரகுருபரர்




புரட்டாசி 1 (17—9—83)

தொகுதி 5 பகுதி 12

உ

சிவ சிவ

# 'ஸ்ரீ குமரகுருபரர்'

கயிலைமாமுனிவர்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

அருளாணையின் வண்ணம்

வெளிவரும் சமய — இலக்கியத் திங்கள் இதழ்.


சிறப்பாசிரியர்.

பேராசிரியர்

திரு. அ. ச. ஞானசம்பந்தன், M. A., சென்னை-83

ஆசிரியர் குழு:-

திரு மு. அருணாசலம், M. A., திருச்சிற்றம்பலம்

திரு கா. ம. வேங்கடராமையா, M. A., தஞ்சை

மகாவித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர், மதுரை

மகாவித்துவான்

திரு. சி. அருணைவடிவேல் முதலியார், அண்ணாமலைநகர்

திரு. க. வச்சிரவேல் முதலியார், B. A., L. T, காஞ்சிபுரம்

புலவர் திரு. கீரன், லால்குடி

டாக்டர் திரு. டி. பி. சித்தலிங்கையா, M. A., Ph.D., மதுரை

திரு. கு. சுந்தரமூர்த்தி, M. A., திருப்பனந்தாள்

திரு. பொ. முத்தரசு M. A., ஸ்ரீவைகுண்டம்


அட்டையில்:

ஸ்ரீ அருணந்தி சிவாச்சாரியார் திருவுருவம்

பூங்கொன்றைக் கண்ணியான் பொன்மன் றிறைஞ்சிடுக
ஆங்கொன்றைக் கண்ணி யவர்.



# அருள் பழுத்த கனிச்சுவை


திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர்
"கயிலைமாமுனிவர்" ஸ்ரீலஸ்ரீ காசிவாசி
முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்


தம் குருநாதராகிய ஸ்ரீ மாசிலாமணி தேசிகர் அவர்களை ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் 'சூரியன்' என்று வருணிக்கிறார். ஞான ஒளியைச் சூரிய ஒளியாகச் சொல்லும் கவிமரபு உண்டு. 'கோடி சூரியப் பிரகாசம்' என்பார்கள். ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் குருதேவரைச் சூரியனாகச் சொன்னதைக் காட்டிலும் சூரியனைக் குறிக்க 'விண்மணி' என்ற சொல்லைக் குறித்தது மிக மகிழத்தக்கதாகும். விண்மீன்களில் பெரிதும் சிறந்ததாகிய சூரியனை 'விண்மணி' என்று குறிப்பது பின்னைப் புதுமைக்கும் புதுமையாக அமைந்துள்ளது.

சூரியப் பிரகாசம் எல்லா உயிர்கட்கும் இன்றியமையாதது. வளர்ச்சிக்கு உதவுவது. இயக்கத்திற்குத் துணையாவது. சூரிய ஒளி - குருவருள். வள்ளுவப் பெருந்தகை அறத்திற்குவெயிலை உவமை சொன்னார்.

'என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்'

என்பது குறள். வெயிலைத் தரும் சூரியன் என்பிலதனை விரோதத்தால் காய்வதில்லை. தாங்கும் சக்தி இன்மையால் புழுக்கள் வெயிலில் துடிக்கின்றன. குருவருள் பக்குவர்களுக்கு மட்டுமே இதம்தரும்; பதம்தரும்.

பக்குவம் அடைந்த அடியவர்களின் கண்மணியாக விளங்கி எல்லாவற்றையும் காட்டுவதும் குருநாதனே. குருநாதனே பார்வையாக அமையும் பட்சத்தில் காணப்பட்ட பொருள்கள் பற்றி ஐயமோ திரிபோ இருக்க இடமில்லை. அன்றியும் இப்பேறு பெற்ற அடியவர்களின் காட்சிகளெல்லாம் நற்காட்சிகளே என்பதும் உறுதியாகிறது. இக்காட்சி முறைமையைத்தான் அப்பர் சுவாமிகளும் 'அவனருளே கண்ணுகக் காணுதல்' என்பார். குருநாதன் அடியவரின் கண்ணுக இருந்து எல்லாவற்றையும் காட்டுகிறுன் என்கிறுர் ஸ்ரீ சுவாமிகள். 'எவையும் காட்டுமால்' என்பதற்குப் 'பரகதிக்கு உகந்த எவையும்' எனப் பொருள் கொள்ள வேண்டும்.

**விண்மணியாய்க் காண்போர் விழிக்குள் பொலிந்ததுணைக்**
**கண்மணியாய் நின்றுஎவையும் காட்டுமால்**

*[விண்மணி-சூரியன்; காண்போர்-அடியார்; பொலிந்த-விளங்கிய; துணை - இரண்டு; கண்மணி - பாவை; நின்று-நிலைபெற்று; ஆல் - அசை.]*

என்பது பண்டார மும்மணிக்கோவை இருபத்தேழாம் பாடலாகிய வெண்பாவின் முதற்பகுதி.

பாம்பின் விஷம் திரண்டு மணியாகும் என்பதும், அது பாம்பின் சிரசில் இருக்கும் என்பதும், அம்மணியை

உமிழ்ந்து பாம்பு இரை தேடும் என்பதும் கவிசம்பிரதாயம். அறிவியல் ஆய்வாளர்கள் ‘இச்செய்திகள் தவருனவை’ என மறுப்பதால் இதனைக் கவிசம்பிரதாயம் என்று குறிக்கிறோம்

பாம்பின் முடியில் மணியிருக்கும். ஆனல் மணியின் முடியில் பாம்பிருக்க முடியுமா?-முடியும். சிவனின் முடியில் பாம்பிருக்கிறதல்லவா? சிவனே மாசிலாமணி. சிவன் என்னும் மாசிலாமணி தன் முடியின்மேல் பாம்பைக் கொண்டிருந்தார் பின்னர் அடியார்கட்கு மானுட வடிவில் உபதேசித்தற்காக மண்ணுலகில் மாசிலாமணி தேசிகராக எழுந்தருளினர். சிவனின் தலையில் இருக்கும் பாம்பின் தலையிலும் மணி இருக்கிறது என ஸ்ரீ சுவாமிகள் குறிக்கிருர்.

— ஒண்மணிச் சூட்டு

அம், மா சுணம்தன் அணிமுடிமேல் கொண்டிருந்த
இம் மாசி லாமணிமற்று இன்று

[ஒண், ஒள் - ஒளி; சூட்டு - உச்சி; மாசுணம் - பாம்பு; அணி - அழகு; முடி - சிரம்; மற்று - அசை; இன்று - இது பொழுது]

சிவன் பாம்பணி கொண்டவன் சிவனே மாசிலாமணியாக வந்தருள்கின்றுன். மாசிலாமணியின் அருள் சூரியனின் அருள் போன்றது; குருநாதர் பக்குவம் பெற்ற அடியவர்களின் விழிப் பாவையாய் விளங்கிப் பரகதிக்கு வேண்டிய யாவையும் காட்டி அருள்கிருர். இக்கருத்துக்கள் யாவையும் அடங்கிய பாடலின் முழுவடிவையும் காணுங்கள்:-

விண்மணியாய்க் காண்போர் விழிக்குள் பொலிந்ததுணைக்
கண்மணியாய் நின்றுஎவையும் காட்டுமால் — ஒண்
மணிச்சூட்டு
அம், மா சுணம்தன் அணிமுடிமேல் கொண்டிருந்த
இம்மாசி லாமணிமற்று இன்று

—சிவ சிவ

# நூல் நிறை

## மூவரையன் விறலி விடு தூது

[இயற்றியவர் : சிற்றம்பலக் கவிராயர்; பதிப்பாசிரியர் :- முனைவர் இரா. நாகசாமி; வெளியீடும் கிடைக்குமிடமும் :- மகாமகோபாத்யாய டாக்டர். உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம் - திருவான்மியூர் - சென்னை-600 041. பக்கம்(5+40+78+4) விலை-ரூ. 21]

ஐந்நூற்றைந்து கண்ணிகளில், பழகுதமிழில், மூவரையன் எனும் வள்ளலிடத்துப் பொருள்பெற்று மீளும் வாசுதேவன் என்பான் தன் மனைவியிடத்து விறலியைச் செல்ல விடுப்பதாக அமைகிறது இந்நூல்.

பதினேழாம் நூற்றாண்டில் மிகவும் சிறப்புடன் நாடு போற்றும் கவிஞராய், 'கவிராயர்' எனச் சிறப்பிக்கப் பெற்ற சிற்றம்பலக் கவிராயரின் சிந்தனைவழி வெளிப்பட்டுள்ள இணையற்ற தூது நூலாகத் திகழ்கிறது இது.

வள்ளுவத்தில் இணையற்ற ஈடுபாடு மிக்குடையவராய் அவர்தம் கருத்துக்களையும் மொழி, பொருளையும் பொன்னே போல் எடுத்துப் போற்றியுள்ளார் கவிஞர்.

நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடிக்கும் நடன மாதர்களின் இயல்பு கூறும் வகையில் இசை, நாட்டியக் கூறுகள் நலம்பெற உரைக்கப்பட்டுள்ளன. இசைநூல் வல்லார்க்கு இதன் உட்கூறுகள் இன்பம் பயப்பிக்கும்.

அக்காலப் பெண்களின் சேலைகள், கச்சுகள் முதலியவையும், மற்றும் உடைவகைகளும் உரைக்கப் பெற்றுள்ளன.

வட்டார வழக்குகளின் தாக்கம் இலக்கியத்துள் ஏற்பட்டுள்ளது கற்பசுவிலே பால் கறத்தல், கல்லிலே நார் உரித்தல், பழம் நழுவிப் பாலில் வீழ்தல் முதலியன சில காட்டுக்கள்.

விறலி விடு தூதாக அமைந்த பிற இலக்கியங்கள், அவற்றோடு ஒப்பு நோக்கம், முதல் வழிநூல்களுக்கிடையே அமையும் ஒப்புமை,

வேற்றுமை, நூல் பற்றிய ஆழ்ந்த ஆய்வு ஆகியவற்றை வழங்கி நூன்முகம் கண்டே நூலை முழுதும் உணர உதவியுள்ளவர் பதிப்பாசிரியர்.

சொல், பொருட் சுவை நயம் மிக்க சுந்தரத் தமிழ் நூல்:

## அகராதி நிகண்டு

*[பதிப்பாசிரியர் : - டாக்டர்: இரா. நாகசாமி: வெளியீடும் கிடைக்குமிடமும்; இந்நூலும், இதனைத் தொடர்ந்து இந்நூல்நிறைப் பகுதியில் இடம்பெறும் நூல்களும் டாக்டர் ஐயரவர்கள் நூலக வெளியீடுகளே: பக்கம் - 12 + 158; விலை - ரூ. 15/ = ].*

'சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்ல வேண்டும்' -இது ஆன்றோர் வாக்கு அது எல்லோராலும் இயலுவதன்றல்லவோ''? சிறந்த தமிழ்நூல் பயில்வுடையாரையும் சில குறிப்பிட்ட சொற்கள் பொருள் புலப்பாடின்றித் தடைசெய்ய நேருவதுண்டு. அதனின் நீங்க, அரியதொரு தொகுப்பாக இவ்வகராதி நிகண்டு அமைந்துள்ளது: ஆசிரியர் பெயரை அறியக்கூடவில்லை.

'நிகண்டில், ஏறத்தாழ 7500 மூலச் சொற்களும், மொத்தம் 22, 500 - க்கு மேற்பட்ட சொற்களும் இடம் பெற்றுள்ளன' - இது முன்னுரையின் வரிகள்; இதைப் படிக்கையில் பரவசம் ஏற்படுகிறது: பயமும் உண்டாகிறது – அறியாத - பொருள் இதுவரை உணராத சொற்களின் பெருக்கம் கண்டு.

அச்சம் - பொருள், பயம் - என்று உணர்த்தினலே பொருள் உணரக்கூடிய நிலையில் உள்ளமை நாமறிந்தது; அவ்வாறன்றி சொற்களுக்குப் பெரும்பான்மையும் தனித்தமிழ்ச் சொற்கள் (பொருள்) கொண்டு, காட்டப்பெற்றுள்ளன,

அரியதொரு ஆய்வு முன்னுரை இந்நூலுக்கு அணி செய்கிறது. அதனை அளித்தவரும், நூல் அழகுறும் வகையில் வெளிவரச் செய்தவரும் டாக்டர். இரா. நாகசாமி அவர்களே.

குற்றெழுத்து, நெட்டெழுத்து என இரண்டாகப் பகுத்து, பின் வரிசைப் படுத்தப் பெற்று வகையுற சொற்கள் விளக்கப் பெற்றுள்ளன.

தமிழ்நூல் பயிலப் புகுவார்க்கேயன்றித் தமிழ்நூற் பயில்வுடையார்க்கும் தேவையான அகராதி நூல் இது என்பதில் ஐயுறவில்லை.

# காஞ்சிப் புராணம்

[ஆசிரியர் :- ஆளவந்தார் ஆதீனக் கச்சாலேயர்; பதிப்பாசிரியர்; திரு S. K. இராமராஜன்; பக்கம்:- 40 + 436 + 8; விலை-ரூ. 25].

காஞ்சிப் பெரியவரின் கண்கவர் வண்ணத் திருவுருவப் படத்துடன் டாக்டர். ஐயரவர்கள் நூலக வெளியீடாக மலர்ந்துள்ளது இந்நூல்.

'முத்தி தரும் நகரேழில் முக்கியமாம் காஞ்சி' என்னும் ஆன்றோர் வாக்கு. கம்பை மாநகரின் கரைச் சிறு கன்னி பார மூலைத் தழும் பணியாகக் கொண்ட கம்பனின் திருவருள் வேட்டுப் பாடப் பெற்றுள்ள இந்நூல் இனிய, எளிய சொற்கோவைகளினுல் சுவையூட்டக் கூடியதாக அமைந்துள்ளது.

'புராணங்கள் என்ருல் கதை; அவற்றில் உண்மைக் கூறுகள் இலே;' என்பார் உரை பொய்யுரையாக மற்ற தமிழ்ப் புராணங்களையொத்த கட்டமைப்புடன் கற்பார்க்குக் களியினையூட்டுகிறது இந்நூல்.

12-சருக்கங்களில், ஏறத்தாழ ஆயிரத்து மூந்நூறு பாடல்களில் காஞ்சிப் பெருமையும், கள்ளக் கம்பன் கருணையும் குழைத்துப் பூசப் பெற்றுள்ளது.

"புலமையைக் காட்ட வேண்டும் என்னும் எண்ணம் இந் நூலாசிரியர்பால் காணப்படவில்லை"; இது பதிப்பாசிரியர் குறிப்பு. அவரோடு கருத்தொற்றுமையுடையவராகிருேம்; நூலை நிறைவு செய்தபின்.

காஞ்சியை அடைந்து சாதனங்கள் தரித்து அர்ச்சனைகள் புரிந்தால்,

"ஏது வேண்டினும் எய்துவீர்" — என்றும், "காதல் யாவதும் தருதலம் காஞ்சி" -என்றும் கச்சிப் பெருமை எடுத்துரைக்கப் பெறுகிறது.

"அறிஞநரேனும் இந்நீர் அருமையை யறியா ரேனும்" — கிரஹணநாளில் இந்நீர் மூழ்கினுல் உலகத்துக்கு அரசராவார்"- எனத் தீர்த்தமாடும் பயன் திருத்தமுறக் கூறப் பெற்றுள்ளது.

அம்பிகை இறைவனின் வேருகாது- சத்திபின்னமற நின்ருலும் உயிர்கள் உய்யும் பொருட்டு வேருகிப் பூசனை புரிந்ததை,

'பொங்கு மாருயிர் வருக்கமீ தறிந்துய்யும் பொருட்டால், கடவுளர் பூசையும் அமைப்பாள்' — எனப் பேசுகிறது புராணம்.

பதிப்பாசிரியர் வழங்கியுள்ள அழகிய முகவுரைப் பகுதியும் சுருங்கிய அளவில் விரிந்த பொருளை விளக்கியுள்ள முன்னுரைப் பகுதியும் நூல்நுவல் பொருளைக் கரும்பின் கட்டியென எளிமையாக்கித் தருகின்றன.

புராணங்களைப் பற்றிய ஆழ்ந்த ஆய்வுக் களங்கள் பதிப்பாசிரியரின் புராண நூற் பயிற்சியைத் தெளிவாக்குகிறது. இப்புராணப் புதுமையாக எடுத்துக் கூறப்பெற்றுள்ள சமயப் பொறையுடைமை மிகவும் சிறப்பான, அவசியமான ஒன்றே; இதனை இயற்றிய நூல் ஆசிரியரும் அதனை உணர்ந்திருக்கிறார்.

முடிவாகப் பதிப்பாசிரியர் கூறியதையே நாமும் கூறுவோம்:-

''இப்புராணச் சிறப்பு முற்றும் வரைவது கடினம்; கற்று மகிழ்வது அறிஞர் கடமை''.

முருகு. சுவாமிநாதன்


Phone No: 222 Tel Add. "JEWELLERY"
T. N. G. S. T. No. 209126. Post Box No. 14
L. No. 8/77. Residence Phone No: 622

தரம் மிக்க தங்க நகைகளுக்கு

நடராஜ விலாஸ்

ஜுவல்லரி ஹால்

சிதம்பரம்

முகவரி

செ. ரெத்தினசாமி செட்டியார் சன்ஸ்

உரிமையாளர்கள்:

நடராஜ விலாஸ் ஜுவல்லரி ஹால்

26, 27, 28, கடைத்தெரு, சிதம்பரம்.

தென்னார்க்காடு மாவட்டம் — 608 001

## ஸ்ரீ காசிமடத்தின் புதிய வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| திருவருட்பயன் (விளக்க உரையுடன்) | விலை ரூ. | 1–50 |
| நீதிநெறிவிளக்கம் ,, | விலை ரூ. | 1–50 |
| உண்மைநெறி விளக்கம் ,, | விலை ரூ. | 0-75 |
| கந்தர்கலி வெண்பா ,, | விலை ரூ. | 1-50 |
| உண்மை விளக்கம் ,, | விலை ரூ. | 1-00 |
| திருவுந்தியார் ,, | விலை ரூ. | 1-25 |
| கொடிக்கவியும் வினவெண்பாவும் ,, | விலை ரூ. | 0-75 |
| திருக்களிற்றுப்படியார் ,, | விலை ரூ. | 1-50 |
| இருபா இருபஃது ,, | விலை ரூ. | 1-25 |
| போற்றிப் பஃறொடை ,, | விலை ரூ. | 1-25 |
| நெஞ்சுவிடு தூது ,, | விலை ரூ. | 1-50 |
| சிவப்பிரகாசம் | விலை ரூ | 2-50 |
| திருக்குறள் ஒரு பொதுமறை | விலை ரூ. | 3-00 |
| மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்-கருத்தரங்கக் கட்டுரைகள் | விலை ரூ. | 3-00 |
| திருவாசகம்-ஆங்கில மொழிபெயர்ப்பு (கோ. வன்மீகநாதன்) | விலை ரூ. | 15-00 |
| திருவருட்பயன்-நிரம்ப அழகிய தேசிகர் உரையுடன் | ரூ. | 5-00 |
| அபிராமி அந்தாதி தெளிவுரையுடன் | விலை ரூ. | 1-00 |
| திருவிளையாடற்புராணம்(உரைநடை மதுரைக்காண்டம்) | விலை ரூ. | 4-00 |
| திருவிளையாடற்புராணம் (உரைநடை கூடற்காண்டம்) | விலை ரூ | 3-50 |
| திருமுறைகண்ட புராணம், சேக்கிழார் புராணம் | விலை ரூ. | 0-75 |
| திருத்தொண்டர் புராணம் (மூலம்) | விலை ரூ | 12-00 |
| திருத்தொண்டர்புராணம் (உரைநடை) | விலை ரூ | 12-00 |
| Peeps in to the Cultural Heritage of Hinduism (M. ARUNACHALAM.) | விலை ரூ, | 25-00 |
| திருக்குறள் உரைக்கொத்து | விலை ரூ. | 7-50 |
| திருவுந்தியாரும் திருக்களிற்றுப்படியாரும் (திருமுறைக் கலைஞர் க. வெள்ளைவாரணனர்) | விலை ரூ | 3-25 |
| தொல்காப்பியம் நன்னூல்-எழுத்து | | 10-00 |

விற்பனையாளர்களுக்கு 20% கழிவு உண்டு.

கு: 1000/க்கு மேற்பட்ட ஆர்டர்களுக்கு அனுப்புகைச்செலவு இலவசம்.

முகவரி;- மேலாளர்:
ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள் 612504
(தஞ்சைமாவட்டம்)

# "9, 10, 11 - ஆம் திருமுறைகள் உணர்த்தும் இலக்கியக் கொள்கை"

கா. ம. வேங்கடராமையா எம். ஏ,

6. நயமான உவமைகள் இந் நூலிற் பல உள,

சூரியகாந்தமும் சூழ் பஞ்சும்
போலவே;
ஆரியன் தோற்ற முன் அற்ற
மலங்களே;
ஆமேவு பால்நீர் பிரிக்கின்ற
அன்னம்போல்;
ஒருமையுள் ஆமைபோல் உள்ளே ந்
தடக்கி
புரையற்ற பாலினுள் நெய்கலந்
தாற்போல;
உப்பு ... அப்பினிற் கூடியது
ஒன்ருகு மாபோல்;
காய்ச்சபலாவின் கனியுண்ண
மாட்டாமல்
ஈச்சம்பழத்துக்கு இடருற்ற
வாறே;
குயிற்குஞ்சு முட்டையைக்
காக்கைக் கூட்டிட்டால்
அயிற்பின்றிக் காக்கை வளர்க்
கின்றது போல்;
ஆற்றிற்கிடந்த முதலைகண்
டஞ்சிப்போய்
ஈற்றுக்கரடிக்கு எதிர்ப்பட்டதனெ
டொக்கும்;
காலினில் ஊறும் கரும்பினிற்
கட்டியும்
பாலினுள் நெய்யும் பழத்துள்
இரதமும்
பூவினுள் நாற்றமும் போலுளன்
எம்மிறை;
புளிக்கண்டவர்க்குப் புனலூறு
மாபோல்;

இவை போன்று பலவுள. மேலே கண்டவை பல செந்தமிழ் நூல்களிலும் பயின்றுள்ளமை உய்த்துக்கொண்டு உணரற் பாலனவாம்.

7. சூனியசம்பாஷணை என்ற தலைப்பில் மறைபொருட்கூற்று 70 பாடல்களில் கூறப்பெற்றன. இதில் கண்ட பாடல் ஒவ்வொன்றும் எளிதில் பொருள் விளங்காததாய் உள்ளது. எடுத்துக் காட்டாக ஒரு பாடல்:-

வழுதலை வித்திடப் பாகல்
முளைத்தது
புழுதியைத் தோண்டினேன்
பூசனி பூத்தது

தொழுதுகொண் டோடினர்
தோட்டக்குடிகள்
முழுதும் பழுத்தது வாழைக்
கனியே. (2669)

யோகப்பயிற்சி செய்யின் வைராக்கியம் தோன்றுப; தத்துவ ஆராய்ச்சி செய்தேன் சிவம் வெளிப்பட்டது; இந்திரியங்கள் முதலியன அடங்கியோடின; ஆன்மலாபம் முற்றும் கிடைக்கப்பெற்றேன் - என்பது இதிற்கண்ட பொருளாகும்.

8. அந்தாதித்தொடை அமைந்த பகுதிகள் உண்டு. நாலாம் தந்திரம் 13 பகுதிகளையுடையது. ஒவ்வொரு பகுதியும் அந்தாதித் தொடையமைந்தது.

9. தொல்காப்பியனார் ''எழுத்தெனப்படுப, அகரமுதல னகர விறுவாய், முப்பஃ தென்ப'' என்பர். ஆனால் திருமூலர் தமிழ் மொழிக்கு 16 உயிர்களும், 35 மெய்களும் ஆக 51 எழுத்துக்கள் உண்டு என்பர்.

ஆதியெழுத்தவை ஐம்பதோ
டொன்றென்பர் — 963
அந்தமும் இன்றியே ஐம்பத்
தொன்றாயதே — 946

10. பல ஆண்டுகள் உயிர் வாழலாம் என்ற கொள்கையுடையவர் திருமூலர்; திருமூலரே ''தப்பிலாமன்றில் தனிக்கூத்துக் கண்டபின், ஒப்பில் எழுகோடி யுகம் இருந்தேனே'' (74) என்பர். பின்வரும்பாடல்கள் பல்லாண்டுகள் வாழ்வதற்குரிய உபாயத்தைக் கூறுவனவாம்.

வளியினை வாங்கி வயத்தில்
அடக்கிடில்
பளிங்கொத்துக் காயம்
பழுக்கினும் பிஞ்சாம்; (551)
அண்டம் சுருங்கில் ஆக்கைக்கு
அழிவில்லை (718)
நாட்டமிரண்டும் நடுமூக்கில்
வைத்திடில்
வாட்டமும் இல்லை மனைக்கும்
அழிவில்லை; (584)
காற்றைப் பிடிக்கும் கணக்கறி
வார்க்குக்
கூற்றை யுதைக்கும்
குறியது வாமே: (602)

11. திருமூலர் தம் வரலாற்றைப் பாயிரத்தில் பல திருப்பாடல்களில் குறித்துள்ளார். அவருடைய இயற்பெயர் 'சுந்தரம்' என்பதும், இந்நூலை, ஒன்பது தந்திரங்களாக 3000 பாடல்களில் பாடினார் என்பதும், 'தந்திரம் என்பது சார்வு மூவாயிரம். சுந்தரன் ஆகமச் சொல் மொழிந் தானே' (101) என்பதால் அறியவரும். நந்தியருளாலே நாதனும் பேர்பெற்றார் (68) இவரோடு எண்மர் அருள் பெற்றவர் என்பதை,

''நந்தி அருள் பெற்ற நாதரை
நாடிடில்
நந்திகள் நால்வர் சிவயோக
மாமுனி

மன்று தொழுத பதஞ்சலி
வியாக்ரமர்
என்றிவர் என்னோ டெண்மரு
மாமே''

என்ற திருமந்திரம் கூறும். அவர் மூலன் என்னும் ஆயன்உடலிற் புகுந்ததும் 'நந்தி அருளாலே மூலனை நாடி'' (68) என்றமை யால் அறியப்பெறும். திருமூல ரிடம் மந்திரோபதேசம் பெற்ற வர் ஏழுபேர் என்பதை,

''மந்திரம் பெற்ற வழிமுறை
மாலாங்கன்
இந்திரன் சோமன் பிரமன்
உருத்திரன்
கந்துருக் காலாங்கி
கஞ்சமலையனோடு
இந்த எழுவரும் என்பழியாமே''

என்ற திருமந்திரம் கூறுகிறது. திருவாவடுதுறையில் அரசமர நிழலில் இருந்து சிவநாமங்களை ஓதிக்கொண்டு ஞானபூசை செய்துகொண்டு ஆகமம் செப்ப லுற்றார், இதனைப் பின்வரும் திரு மந்திரப் பகுதிகளால் அறியக் கூடும்.

சேர்ந்திருந்தேன் சிவனுவடு
தண்டுறை
சேர்ந்திருந்தேன் சிவபோதியின்
நீழலில்
சேர்ந்திருந்தேன் சிவநாமங்கள்
ஓதியே; (79)
என்னை நன்றாக இறைவன்
படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்
செய்யுமாறே; (81)
அரனடி நாடொறும் சிந்தை
செய்தாகமம்
செப்பலுற்றேனே; (73)

அன்றியும் தேவியின் அருட்பிர சாதம் பெற்றவர் இவர் என் பதை, 'நேரிழையாவாள் நிரதிச யானந்தப், பேருடையா ளென் பிறப்பறுத் தாண்டவள், சீருடையாள் சிவனுவடுதண்டுறை சீருடையாள் பதம் சேர்ந்திருந் தேனே' (78) என்ற திருமந்திரம் பகரும். இவர் ''தப்பிலாமன்றில் தனிக்கூத்துக் கண்டபின் ஒப்பில் எழுகோடியுகம்'' இருந்தவர்.

12. சக்திவழி பாடும் இவ ரால் போற்றப்பெற்றமை சில சில தலைப்புக்களிற் (1045 முதல் 1254 வரை பல பாடல்களிற்) சொல்லப்பெற்றுள்ளன.

''சக்தி என்பாளொரு சாதகப்
பெண்பிள்ளை
முத்திக்கு நாயகி
என்பதறிகிலர்'' (1199);
''திரிபுர சுந்தரி அந்தரி சிந்துரப்
பரிபுரை நாரணி யாம்பல
வண்ணத்தி
இருள்புரை ஈசி மனோன்மணி
என்ன
வருபலவாய் நிற்கும் மாமாது
தானே; (1046)
''ஏடங்கை நங்கை
இறை எங்கள் முக்கண்ணி
வேடம் படிகம் விரும்பும்
வெண்டாமரை

பாடும் திருமுறை பார்ப்பதி
யாதங்கள்
சூடுமின் சென்னி; வாய்த்
தோத்திரம் சொல்லுமே;
(1046)

என்பன காண்க.

13.

பேர்கொண்ட பார்ப்பான்
பிரான்தன்னை யர்ச்சித்தால்
போர்கொண்ட நாட்டுக்குப்
பொல்லாவியாதியாம்
பார்கொண்ட நாட்டுக்குப்
பஞ்சமுமாம் என்றே
சீர்கொண்ட நந்தி
தெரிந்துரைத்தானே. (519)

அகரம் ஆயிரம் அந்தணர்க்
கீயிலென்
சிகரம் ஆயிரம் செய்து
முடிக்கிலென்
பகரும் ஞானி பகலூண்
பலத்துக்கு
நிகரில்லை என்பது நிச்சயம்
தானே. (1860)

ஆர்க்கும் இடுமின் அவரிவர்
என்னன்மின் (250)
யாவருக்குமாம் உண்ணும்
போதொரு கைப்பிடி (252)

என்றின்னோரன்னவாற்றான் திருமூலர்து சமுதாயக் கொள்கை இற்று என்பது தெற்றெனத் தெரியும்.

14.

"தேவர்குறளும் திருநான்
மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்-
கோவை
திருவா சகமும் திருமூலர்
சொல்லும்
ஒருவா சகமென் றுணர்"

என்ற ஔவையார் பாடல்கொண்டு திருமந்திரக் கொள்கைகள் மற்ற சமயநூற் கொள்கைகளோடொப்பனஎன்று கொள்ளலாம். இந்நூலை யோதி நலம் நுகரின் சாலவும் பயன் தரும்; அவ்வின்பம் சொல்லொணாதாகும்; திருமூலர் அருளும் வண்ணம் "மகட்குத்தாய் தன் மணாளனோடாடிய, சுகத்தைச் சொல் என்றால் சொல்லுமாறெங்ஙனே"

(4)

1'-ம் திருமுறை – பிரபந்தமாலை.

1. சமய இலக்கியச் சிறு நூல்கள் நாற்பது இதில் இடம் பெற்றுள்ளன. அவற்றிள் தொகுப்பு ஆசிரியர் பாடியவை பத்து நூல்களாகும். இவற்றுள் பிரபந்த வகைகள் 21. இவற்றுள் அந்தாதி 8; ஆற்றுப்படை 1; இரட்டை மணிமாலை 4; உலா 2; எட்டு 1; எழுகூற்றிகை 1; எழுபது 1; ஏகாதச மாலை 1; ஒருபா ஒருபஃது 1; கலம்பகம் 1; கலிவெண்பா 1; கோபப் பிரசாதம் (சினத்தலும் அருளலும்) 1; சீட்டுக்கவி 1; தொகை

1; நான்மணிமாலை 1; பதிகம் 2; பெருந்தேவபாணி 1; மறம் 2; மும்மணிக்கோவை 7; விருத்தம் 2; வெண்பா 1.

2. இறைவனையும் அடியார்களையும் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடியனவாக இத்தொகுப்பில் கண்ட நூல்கள் காணப்பெறுகின்றன: விநாயகரைப் பற்றியவை 3; முருகவேளைப் பற்றியது 1; சிவபெருமானைப் பற்றியவை 25; சம்பந்தரைப் பற்றியவை 6; அப்பரைப் பற்றியது 1; கண்ணப்பரைப் பற்றியது 2; சேரலனுக்காக 1; திருத்தொண்டர் அனைவரையும் பற்றியது 1.

'நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி நற்கனகக் கிழிதருமிக் கருளியவர், சிவபெருமான், என்பர் அப்பர். வேண்டுவார்க்கு வேண்டுவதை ஈபவன் இறைவன்; ஆகவே பாணபத்திரர் பொருட்டுச் சேரலனுக்கு எழுதியனுப்பிய சீட்டுக்கவி, சிவபெருமானாலேயே எழுதியருளப் பெற்றதாகலின் அதனை முதற்கண் வைத்தார் நம்பிகள்.

இறைவன் அம்மையே என்ன, பேயாரும் அப்பாவென்று அழைத்த பெருமையுடையவரும், நாயன்மார் அறுபதிற்று மூவருள் பழமையானவரும் ஆகிய காரைக்கால் அம்மையார் பதிகங்கள் அடுத்து அமைக்கப்பெற்றன. அவை காலப்பழமை நோக்கியே மூத்த திருப்பதிகங்கள் எனப் பெற்றன.

சங்கத் தமிழ் நூல்களுள் ஒன்று ஆகிய திருமுகாற்றுப் படையும் இதில் இடம் பெற்றுள்ளது. இப்பிரபந்தமாலையில் இடம்பெற்ற நூல்களுள் இதுவே மிகப்பழமை வாய்ந்தது. முருகாற்றுப்படை என்பதற்கு ''முருகன்பால் வீடு பெறுதற்குச் சமைந்தான் ஒரிரவலனை ஆற்றுப் படுத்துவது'' என்பது பொருள் என நச்சினார்க்கினியர் கூறுவர்.

பிரபந்தங்களுள் மிகப்பழமையானவை அல்லது பெரும்பாலும் முதல்நூல்களாக அமைந்தவையே இத்தொகுதியில் இடம் பெற்றன.

3. ''நினையா தொழிதி
கண்டாய் நெஞ்சமே
இங்கோர் தஞ்சமென்று
மனையாளையும் மக்கள் தம்மையும்
தேறியோர் ஆறுபுக்கு
...அமரர்பிரான் அண்டவாணன்
அடித்தலமே''

இது பேயாரின் திருவிரட்டை மணிமாலையில் 13 - வது பாட்டு. இறைவனைப் பாடும் புலவர்கள் தாம் எப்பாலராயினும் தம்மை ஆண் எனவே கொண்டு பாடுதலாகிய கொள்கையை இது

விவரிக்கிறது. அன்றியும் உலகோர் பொருட்டுத் தம் நெஞ்சை விரித்துப் பாடுவதும் அருளாளர் தம் கொள்கையாகவிருத்தலைப் பின்வரும் ஐயடிகள் காடவர் கோன் பாடலாலும் அறியவரும்.

என்நெஞ்சே உன்னை இரந்தும் உரைக்கின்றேன்
கன்னஞ்செய் வாயாகில்
காலத்தால் — வன்னெஞ்சேய்
மாகம்பத் தானை உரித்தானை வண்கச்சி
ஏகம்பத் தானை இறைஞ்சு.

4. பல தலங்களையும் ஒரு தலத்துக்கு ஒரு பாடல் வீதம் பாடியவர் ஐயடிகள் காடவர் கோன் எனும் பல்லவ அரசராகிய சிவனடியார். இவர் பாடிய நூல் க்ஷேத்திரத் திருவெண்பா எனப் பெறும். இப்பொழுது கிடைத்துள்ள பாடல்கள 24. அவை தில்லை, குடந்தை, ஐயாறு, ஆரூர், திருத்துருத்தி, திருக்கோடிகா, பாண்டவாயத் தென்னிடைவாய், திரு நெடுங்களம், குழித்தண்டலை, ஆனைக்கா, மயிலை, சேனை மாகாளம், வளைகுளம், சாய்க்காடு, திருப்பாச்சிலாச்சிராமம், சிராமலை, திருமழபாடி, திருவாப்பாடி, காஞ்சிபுரம், திருப்பனந்தாள், திருவொற்றியூர், திருக்கடவூர் மயானம் என்பன.

5. (அ) இத் தொகுப்பில் நக்கீரர் பாடிய நூல்கள் பத்து இடம் பெற்றுள்ளன. அவற்றுள் ஒன்று சங்கத்தமிழ் ஆகிய திருமுருகாற்றுப்படை. இன்னொன்று கயிலைபாதி காளத்தி பாதியந்தாதி இது 100 வெண்பாக்களைக் கொண்டது. ஒரு பாடல் கயிலை பற்றியது; மற்றொன்று காளத்தி பற்றியதாகப் பாடப் பெற்றுள்ளது. சிறுகிளி (62) மடக்குருகு (63) இருங்கடல் (64) மாமுகில் (75) இளமதி (77) ஒளிவண்டு (79) குயிற்பிள்ளை (80) ஆகியவற்றை விளித்துக் கூறும் பாடல்கள் உள்ளன. கூடவிழைத்தல் (90) ஒரு பாட்டில் கூறியிருக்கிறது. இங்ஙனம் பாடியவை சங்கமரபை யொட்டியதாகவே கோடும்.

(வளரும்)


## விரைவில் கிடைக்கும்

கந்தபுராணம் — மூலம் முழுவதும் ஒரே நூலாக ஸ்ரீகாசிமடம் வெளியீடாக அச்சாகியுள்ளது.

# திருக்கணித பஞ்சாங்கம்

## தி. கி. நாராயணசாமி, கடலூர்-1

ருத்ரோத்காரி-ஆவணி௴ ( 1983 - செப்டம்பர்௴௴ - அக்டோபர் )

திதி, நட்சத்திர காலம், முடியும் நேரம் (ரயில்வே மணிக்கணக்கில்)

| தமிழ்வ | | ஆங்கிலத்வ | கிழமை | திதி | நட்சத்திரம் |
|---|---|---|---|---|---|
| 1 | | 17 | சனி | ஏகாதசி 27-18 | உத்திரம் 21-37 |
| 2 | | 18 | ஞாயிறு | துவாதசி நாள்முழுவதும் | திருஓணம் 24-39 |
| 3 | | 19 | திங்கள் | ,, 5-49 | அவிட்டம் 27-35 கும்பசந் 14-09 |
| 4 | | 20 | செவ்வாய் | திரயோதசி 8-11 | சதயம்நாள்முழுவதும் நடராஜர் அபிஷேகம் |
| 5 | செப்டம்பர் | 21 | புதன் | சதுர்த்தசி 10-18 | சதையம் 6-17 மீனசந் 26-07 |
| 6 | | 22 | வியாழன் | ○பௌர்ணமி 12-05 | பூரட்டாதி 8-42 |
| 7 | | 23 | வெள்ளி | பிரதமை 13-34 | உத்திரட்டதி 10-46 |
| 8 | | 24 | சனி | துதியை 14-41 | ரேவதி 12-31 மேடசந் 12-31 |
| 9 | | 25 | ஞாயிறு | திரிதியை 15-26 | அசுவனி 13-55 |
| 10 | | 26 | திங்கள் | சதுர்த்தி 15-48 | பரணி 14-56 ரிஷபசந் 21-08 |
| 11 | | 27 | செவ்வாய் | பஞ்சமி 15-46 | கார்த்திகை 15-33 அஸ்தநட்சந் 13-00 |
| 12 | | 28 | புதன் | சஷ்டி 15-16 | ரோகணி 15-44 மிதுனசந் 27-38 |
| 13 | | 30 | வியாழன் | சப்தமி 14-16 | மிருகசீரிஷம் 15-25 |
| 14 | | 31 | வெள்ளி | அஷ்டமி 12-46 | திருஆதிரை 14-36 |
| 15 | | 1 | சனி | நவமி 10-46 | புனர்பூசம் 13-18 கடகசந் 7-40 |
| 16 | | 2 | ஞாயிறு | தசமி 8-19 } ஏகாதசி 29-28 } | பூசம் 11-32 |
| 17 | அக்டோபர் | 3 | திங்கள் | துவாதசி 26-20 | ஆயில்யம் 9-24 சிம்மசந் 9-24 |
| 8 | | 4 | செவ்வாய் | திரயோதசி 23-04 | மகம் 7-00 } பூரம் 28-31 } |
| 19 | | 5 | புதன் | சதுர்த்தசி 19-49 | உத்திரம் 25-04 கன்னிசந் 9-53 |
| | | | | போதாயன அமாவாசை | |
| 20 | | 6 | வியாழன் | ●அமாவாசை 16-46 | அஸ்தம் 23-52 |

| | | | | |
|---|---|---|---|---|
| 21 | 7 | வெள்ளி | பிரதமை 14-03 | சித்திரை 22-05 துலாசந் 10-55 |
| 22 | 8 | சனி | துதியை 11-53 | சுவகதி 20-53 |
| 23 | 9 | ஞாயிறு | திரியை 10-22 | விசாகம் 20-23 விருச்சிகசந் 14-26 |
| 24 | 10 | திங்கள் | சதுர்த்தி 9-37 | அனுஷம் 20-39 சூரிசித்திரைநட் 25-55 |
| 25 | 11 | செவ்வாய் | பஞ்சமி 9-42 | கேட்டை 21-44 தனுஸ்சந் 21-44 |
| 26 | 12 | புதன் | சஷ்டி 10-36 | மூலம் 23-34 |
| 27 | 13 | வியாழன் | சப்தமி 12-11 | பூராடம் 26-00 |
| 28 | 14 | வெள்ளி | அஷ்டமி 14-19 | உத்திராடம் 28-49 மகாசந் 8-40 |
| 29 | 15 | சனி | நவமி 16-46 | திருஓணம் நாள்முழுவதும் சரஸ்வதி பூசை |
| 30 | 16 | ஞாயிறு | தசமி 19-18 | திருஓணம் 7-49 கும்பசந் 21-19 |
| 31 | 17 | திங்கள் | ஏகாதசி 21-41 | அவிட்டம் 10-46 துலாசூரி 19-28 |

---

## இதமான வாழ்வுக்கு எளிய வழிகள்

### 1. சோகை நீங்க

வில்வ இலைச்சாறை எடுத்து அத்துடன் மிளகுத்தூள் சேர்த்து அருந்த சோகை குணமாகும்.

### 2. வயிற்றுக்கடுப்பு (DYSENTRY)

வாழைப்பூவின் சாறை எடுத்து அத்துடன் பனங்கற் கண்டு கலந்து அருந்த வயிற்றுக் கடுப்பு நீங்கும்.

### 3. பல்வலிக்கு

சுக்கை வாயிலிட்டு மென்றுகொண்டிருக்கப் பல்வலி நிற்கும்.

Dr. N. சடையப்பன், S. M. P

# சைவத் திருமுறைகளும் சமுதாய நெறிமுறைகளும்

பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன்.

பாவம் செய்திருந்த நாம் போடுகிற சாப்பாடு ஏழை வயிற்றில் போகவேண்டும். வருஷம் ஒரு நாளாவது அப்படிப் பண்ணவேண்டும். ஒரு ஊரில் 8 பேர் மகேஸ்வர பூஜை பண்ணினல் 365 நாளில் 8 நாள் வயிறு நிரம்பும். இந்த அடிப்படையிலே சோறு போடுகின்ற நாடு இது. ஆனுல் இன்றைக்கு மாடியிலே உட்கார்ந்து கொண்டு, சிகரெட்டைக் கையில் பிடித்துக் கொண்டு, 'சாப்பிட்டுவிட்டு போய்விட்டார்களா' என்று கேட்கிறோம். அதோடு விசாரணை முடிகிறது. ஆனுல் ஞானசம்பந்தர் சின்னப் பிள்ளை, 'சாப்பாடு ஒழுங்காக நடைக்கிறதா' என்று பார்க்கிருர். நாமே சாப்பாடு போட்டால் எத்தனை பேர் சாப்பாடு ஒழுங்காக நடைபெறுகிறதென்று கேட்கிறோம்? இவர் என்ன கேட்கிருர்? சாப்பாடு ஒழுங்காக நடக்கிறதா என்று கேட்டு, அது காலா காலத்திலே நடக்கவில்லை என்று கண்டுபிடித்து, அந்தச் சமையல் காரனைக் கூப்பிட்டு, 'ஏண்டா நேரத்தில் போடவில்லை?' என்று கேட்கிருர். புண்ணியத்திற்குப் கொடுத்த மாட்டைப் பல்லைப் பிடித்துப் பதம் பார்க்கிற மாதிரி, தண்டத்திற்குப் போடுகிருர்கள்; தின்றுவிட்டுப் போக வேண்டியது தானே;ஒருத்தரும் அதைப்பற்றிப் புகார் பண்ணவில்லை. இவராகவே அதைக் கண்டுபிடித்துக் கேட்க, அவன் 'ஏதோ வாசுள்ள காசு வந்து விட்ட' தென்று சொல்கிருன். அதன் காரணத்தை ஆராய்ந்து பார்த்து, அதைக் கண்டுபிடித்து விடுகிருர். அதை அற்புதமாகச் சேக்கிழார் சொல்கிருர். ''கைத் தொண்டாகும் பான்மையினுல் வாசு இல்லாக் காசு பெற்றுர் வாகீசர்'' என்று முடித்து விட்டார்.

மனத்தாலும், மொழியாலும் தொண்டு செய்கிருர் சம்பந்தர். மூன்ருவது தொண்டு மெய்த் தொண்டு. அதுவும் செய்கிருர் திருநாவுக்கரசர். இவ்வளவு வேலை வாங்கிக்கொண்டு செல்லாக் காசைக் கொடுக்கலாமா? கைத்

தொண்டாகும் பான்மையினுல் வாசு இல்லாக் காசு பெற்றுர் வாகீசர். அந்த அளவுக்குச் சமூகசேவை பண்ணுகிருர். ஆகச் சமுதாயத்திலே வருகிற இடையூறுகள் இவர்களை எப்படிப் பாதித்தன என்பதற்கு இது எடுத்துக்காட்டு.

பின்னுலே வந்த வைணவ வியாக்கியான கர்த்தா எழுதினன், 'ஆயர் தம் கொழுந்தே' என்பதற்கு. மரம் நன்றுக இருக்கிறதா என்பதற்கு வேரை நோண்டி நோண்டிப் பார்க்க முடியாது; கொழுந்தைப் பார்த்தால் தெரியும்; வேரில் புழு இருக்கிறதா, இல்லையா என்பது கொழுந்தைப் பார்த்தால் தெரியும்; புழு இருந்தால் கொழுந்து வாடிப் போய்விடும் என்முன். கண்ணபிரானுடைய முகம் வாடினுல் ஆயர்பாடியில் உள்ளவர்கள் நன்றுயில்லை என்று அர்த்தம். இந்த விளக்கத்தை இங்கே கொண்டு வந்தார்.

சமுதாயத்திலுள்ள மக்களுடைய வாட்டத்தைக் கண்ணன் என்னும் குழந்தை பிரதிபலிக்கிறது. அதுபோல் குழந்தையாகிய ஞானசம்பந்தரும் சமுதாயத்திலுள்ள மக்களின் வாட்டத்தைப் பிரதிபலிக்கிருர். ஆகையால்தான் சோறு போடுவது பெரிய காரியமல்ல; அதைக் காலாகாலத்தில் ஒழுங்காகச் சாப்பிடுகிருர்களா: காலாகாலத்தில் நடக்கிறதா என்று பார்க்கப் போகிருர்.

இனி அதற்குமேலே ஒரு படி. இரண்டு மடம் வைத்தார்களென்று கதை. ஒன்று தெரியுமா உங்களுக்கு? இந்த இரண்டு பேரும் ஒன்றுக இருக்க வேண்டுமென்று ஆசைப்பட்டு வருடத்திற்கு ஒருமுறை சந்தித்தவர்கள். They are always together. The long and short of it என்று சொல்வார்கள்.

ஒன்று 80 வயது. ஒன்று 8 வயது என்ன நட்போ இது. ஆச்சரியமான நட்பு. இப்போது அமெரிக்காவில் 40 வயதானவர்களெல்லாம் கிழவர்கள். ஏனென்றுல் 'ஜெனரேஷன் கேப்' என்கிருர்கள். இவ்வளவு சமுதாய மாறுபாடுகள் இருக்கிற காலத்தில் 80 - க்கும் 8 - க்கும் ஓர் அற்புத நட்பு. அப்படி இருக்கிறவர்கள் ஏன் தனியாகப் பிரிந்து போக வேண்டும்? என்றுல், 'மீண்டும் சமூக நோக்கு.' அந்த ஊரில் ஒரே இடத்தில் மடம் வைத்தால் அந்த மூலையில் இருக்கிறவன் இந்த மூலைக்கு வந்து தின்றுவிட்டுப் போவதற்குள் ஜீரணம் ஆகிவிடும். ஆகவே அந்த அந்த மக்கள் அந்த அந்தப் பகுதியிலேயே சாப்பிட வேண்டும். சாப்பாட்டினுடைய பலன் அப்போது தான் ஏற்படும், கோதுமைரொட்டி என்றுல் தாங்கும். நம் சாப்பாடு தாங்காது. எனவே அவர் அங்கே ஒரு மடம் வைத்தார்; இவர் இங்கே ஒருமடம் வைத்தார். எனவே சமுதாயத்திற்

ஆகத்தான் இவர்களுடைய வாழ்க்கை நடைபெறுகிற தென்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

※ ※ ※

சமயச் சண்டை: அது மனித மனத்தின் இயல்பைக் காட்டு கிறது. சண்டை போட்டுப் பழகி விட்டார்கள். இப்போது சண்டை போட ஜைனனும் கிடையாது; பௌத்தனும் கிடையாது. இங்கே அடிப்படையில் தங்கின வன் சைவனும், வைணவனும் தான். இவர்கள் ஒருத்தனுக்கு ஒருத்தன் குடுமியைப் பிடித்துக் கொண்டார்கள். ஜாயின்ட்ஸ் டாக் கம்பெனியாக சைவன் வைணவன் குடுமியைப்பிடிக்க வில்லை; வைணவன் சைவன் குடு மியைப் பிடிக்கவில்லை. சைவர் களுக்குள்ளேயே குடுமியைப் பிடித்துக்கொண்டார்கள். இது இயல்பு. இப்படி வளர ஆரம்பிக் கும்போது ஒன்றும் இல்லையென் றால் ஏதாவது சொல்லிக்கொடுக்க வேண்டும். அதுபோல் சைவர் களுக்குள்ளேயே ஒரு அரை டஜன் பிரிவினை, மோட்சம் போக வேண்டுமென்றால் குறிப்பாகவவ் வொருத்தனும் என்னுடைய வழி யில்போனால் உண்டு; இல்லையென் றால் தொலைந்தாய் என்பான். இது தமிழர்களுக்கு மட்டுந்தான் என்று தயவுசெய்து நினைக்க வேண்டாம். மிக அற்புதமாகச் சொன்னான். The catholics believe that the hell is intended for thsi protetands and the protestants believe viceversa. the eact, is it is, for both - கத்தோலிக்கர்கள் நினைக்கிறார்கள் நரகம் என்பது பிராடஸ்டன்டு களுக்கு உரியதென்று; பிராடஸ் டன்டுகள் நினைக்கிறார்கள்; நரகம் என்பது கத்தோலிக்கர்களுக்கு உரியதென்று. உண்மை எதுவென் றால் அது இரண்டு பேருக்கும் உரியது என்பதுதான்.

காரணம் இந்தப் போராட்டம் வளரத்தான் செய்யும். ஏனென் றால் படைத்த ஆதிகர்த்தா எதற் காகப் படைத்தான் என்பது போய்விட்டது. நாளாவட்டத் தில் இவனுடைய அறிவு கொண்டு அதைப் பார்க்கப் பார்க்க, ஏதோ உண்மையைக் கண்டுவிட்டோமென்ற அறிவு வளர வளர, நான் உண்மையைக் கண்டு விட்டேன், நான் சொல் கிறபடி நீ கேள் என்பான். இது தடி எடுத்தவன் தண்டல்காரன் ஆகிற முறை. அப்படி ஒருத்தன் சொல்ல ஆரம்பித்தால் பின்னால் நான்கு பேர் சேருவான் என்ன இருந்தாலும் இந்த நான்கு பேர் கள் சேர்ந்த உடனே தலைவன் ஆகிவிடுகிறான். தலைவனால் யாரையாவது அடித்தால்தான் தலைமைப் பதவி நிலைக்கும். ஆகவே create enemies and fight with them. டான் குவிக்சாட் மாதிரி, இல்லையென் றால்கூட உண்டாக்கிப் போராடு

வது. கழுத்தை அறுத்தால்தான் சரியான வைணவம். பாட்டே இருக்கிறது. இரண்டு ஒருசைவனை யாவது கழுத்தை அறுத்தால் தான் உண்மையான வைணவன் என்று. 18, 19, நூற்றுண்டு களிலே பிரசங்கம் பண்ணப் போவதென்றால் தடிக்கம்பைத் தூக்கிக்கொண்டு போக வேண்டும், சைவ சித்தாந்தத்தை நித்தாரணம் பண்ணுகிற சூளை சோமசுந்தர நாயக்கர் அவர்கள் திருக்குறளில் சொல்லியிருப்பது போல் 'விழுப்புண் படாத நாள் எல்லாம் வழுக்கினுள் வைக்கும் தன் நாளை எடுத்து' என்பது போல் இரண்டு வைணவன் மண்டையைத் திறக்காத நாள் பிறவாதநாள் என்று நினைக்கும் அளவுக்கு இருந்தார்கள் இப்படி அவர்களும் பண்ணியிருக்கிறார் கள். இதில் குறைந்தவர்கள் கிடையாது என்றால் அந்த அளவுக்குச் சமுதாயம் மாறி விட்டதென்பதற்கு இதுஒரு எடுத் துக்காட்டு. சமயம் தாழ்ந்து விட்டது. அகங்காரம் உச்சம் அடைந்தது.

ஒரு உதாரணம் சொன்னால் புரிந்துகொள்ளலாம். துண்ட றிக்கை போட்டார்கள். ஒரு வரை ஒருவர் எதிர்த்து. வைண வன் சைவனை எதிர்த்துப் போடு கிறான். 'ரோமலிங்கமே' என்று. அவன சைவனைக் கேலி பண்ணு கிறான். ராமலிங்க ஸ்வாமியைக் கேலி பண்ணுகிறான். ராமேஸ் வரத்தில் உள்ள பெருமானை 'ரோமலிங்கமே' என்று கேலி பண்ணுகிறார்கள். சைவன் அந்த நோட்டீசை வாங்கிக்கொண்டு சந்தோஷப்பட்டான். என்ன பண்ணினன் தெரியுமா? ராமேஸ் வரத்தில் எழுந்தருளியுள்ள பெரு மானைத் திட்டினனே என்று கவலைப்படவில்லை. இன்னும் எங்களுடைய லிங்கம் பிழைத்தது; உங்களுடைய ராமன்தான் 'ரோமன்' ஆனன் என்று சொல்லிச் சந்தோஷப்பட்டார் களாம்.

இந்த நிலைமைக்குச் சமயம் போய் விட்டது என்றால் இந்த வளர்ச்சி யால் சமயமா வளர்ந்தது? வேறு ஏதோ வளர்கிறது; சமயம் என்ற பெயரில், இந்த முறையிலே போராடுகின்றவனையோ, வாயில் வந்த மாதிரி பேசுகின்றவனையோ போற்றுகிற நிலைமை வந்து விட்டது அதை மறந்துவிடக் கூடாது. 19, 20 நூற்றுண்டு களில் இப்படிச் செய்தால் இவன் போற்றத்தகுந்தவனுக, பல்லாக் கிலே வைத்து ஊர்வலம் போகத் தகுந்த சமயத் தலைவனுகப் பாற்றப்பட்டார்கள்.

அடடா, எத்தனை பேரைத் தான் நெருப்பிலே போட்டு எரிப் பது. ஒவ்வொருத்தரையும் எரிக்க எரிக்கத் தங்களுடைய சமயம் வாழ்ந்ததாக நினைத்தான். எரி

பட்டவன் இருக்கிருனே அவனுக்கு எரிபட்டதைத் தவிர வேறு ஒன்றுமில்லே. லேடிமர் மற்றும் ரிட்லி என்று இரண்டுபேர் இருந்தார்கள். அவர்கள் பிராடஸ்டன்டுகள்; அவர்களைக் கொளுத்துவதற்குக் கையையும், காலேயும், கட்டி, நெருப்பைப் பற்ற வைத்திருக்கிருர்கள், பிளடி மேரி காலத்தில். ரிட்லியைப் பார்த்து லேடிமர் சொல்கிருன், "ஏ, ரிட்லி, The fire which we are 'going to light to-day will never be quended" பிராடஸ்டன்டுகள் இவர்கள். இவர்களைக் கத்தோலிகர்கள் அப்பளம் பொறிக்கப் போகிருர்கள். இருந்தாலும் இவர்கள் திருப்திப் பட்டுக்கொள்கிருர்கள். இன்று நாம் ஏற்றப் போகிற விளக்கு என்றுமே இங்கிலாந்தில் அணைக்கப்படப் போவதில்லே என்று. அதை எழுதிவிட்டு மெக்காலே எழுதுவான், அது நல்லதுக்கோ, கெட்டதுக்கோ; பிராடஸ்டன்டுகள்தான் இங்கிலாந்தில் அரசஞகலாமென்று பின்னுலே சட்டம் வந்துவிட்டதென்று. அவர்கள் சொன்னது சரியாகப் போய்விட்டது. ஆக எல்லா நாட்டிலேயும் இந்தச் சூழ்நிலே இருக்கத்தான் செய்கிறது.

சமயம் என்ற பெயரில் சமயவாதிகள் தங்களுடைய அகங்காரத்தை அதிகம் பண்ணிக்கொள்வதற்குச் சமயத்தை ஒரு போர்வையாக உபயோகப்படுத்தும் நிலே 17, 18, 19 - ம் நூற்ருண்டுகளில் இருந்தது. இந்த நிலேவருகின்ற காலத்திலே, முதன்முதலில் இதைப் பார்த்து மனம் நொந்தவர் தாயுமானவப் பெருந்தகை. அவர் காலத்திலே வேதாந்திக்கும் சித்தாந்திக்கும் சண்டை. இரண்டு பேருக்கும் இரண்டும் தெரியாமல் இருக்கலாம்.

சென்னேயில் ஒரு பழக்கம் அனுபவம் உள்ளவர்களுக்குத் தெரியும். சார்பட்டா பரம்பரை என்று கேள்விப்பட்டிருப்பார்கள். புரசையில் ஒரு பகுதி. அங்கே குஸ்திப் பள்ளிக்கூடம். அந்தப் பள்ளிக்கூடத்தில் பயின்ருல் அந்தப் பட்டம் — சார்பட்டா பரம்பரை என்ற பட்டம் கிடைக்கும். இப்போது அது மண்ணேடு மண்ணுய்ப் போய், கட்டிடம் போய், அதிலே வேறு ஒரு கட்டிடம் வந்தாகிவிட்டது. இன்றைக்கும் இருக்கிருன் சார்பட்டா பரம்பரைக்காரன். அது எந்த அடிப்படையிலே வந்தது? ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். இது போன்று அடிப்படைத் தோற்றத்திற்குக் காரணமாக இருந்தது என்ருே அழிந்துவிட, அந்தப் பெயரை வைத்துக்கொண்டு போராடுகின்ற இயல்பு எல்லா நாட்டிலேயும் அமைந்துவிட்டது.

ஆக இங்கேசைவ வைணவப் போர் மாதிரி அங்கே பிராடஸ்டான்டிய, கத்தோலிக, பிரஸ்பிடீரிய முதலான போர்கள்

தொடங்கின. பேப்பரை எடுத்துப் பாாத்தால் தினம் ஒன்றுக்கு 30 கத்தோலிக்கர்கள் போனார்கள்; 32 பிராடஸ்டன்டுகள் போனார்கள் அல்ஸ்டரில் என்று படிக்கலாம். இந்தக் கத்தோலிக்கர்களை ஆட்சி செய்கின்ற போப் இருந்து கொண்டிருக்கிறார். ஆனால் ஒன்றும் பண்ண முடியவில்லை. அவன் என்ன நினைக்கிறான், 30 கத்தோலிக்கர்கள் ஒழிந்தால் தாங்கள் பிராடஸ்டன்ட்டுக்குச் சேவை பண்ணியதாக நினைக்கிறான்.

இங்கே மத்தியக் கிழக்கில் 'யார் இஸ்லாமியர்?' என்ற ஆராய்ச்சி. ஷியாக்கள், சுன்னிகள் என்று இரண்டு கட்சி இந்த ஷியாக்கள் எல்லாம் முகமதியர்கள் இல்லையென்று சொல்லுகின்ற சுன்னிகள். இந்த இரண்டு பேரும் முகமதியர்கள் அல்ல; நாங்கள்தான் என்று சொல்லுகிற இரேனியர்கள். இவர்களுக்குள்ளே உள்ள போராட்டத்திற்குப் பஞ்சமே இல்லை. நீங்கள் நினைத்துப் பார்க்கலாம் கத்தரிக்காய்க்குக் காலும் கையும் முளைத்தது போன்று இருக்கிற இஸ்ரேல் இவ்வளவு நாள் வாழ்வதற்கு உரிய ஒரேகாரணம் இந்த அரேபியர்கள் எல்லோரும் ஒன்று சேராததுதான். அவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து பெருமூச்சு விட்டால் இஸ்ரேல் போய்விடும். ஏன் தெரியுமா? அவர்களுக்குள் ஒற்றுமை இல்லை; ஒரு குண்டு அங்கே போட்டால் 9 குண்டுகள் உள்ளுக்குள்ளேயே போடுகிறான். ஆகச்சமயம் என்ற பெயரிலே ஒற்றுமையின்மை வளர்க்கப்படுகிறது. இது உலக வரலாறு முழுவதும் காணப்படுகின்ற காட்சி.

இனி புத்தம் என்ன வாழ்ந்தது? மஹாயானம் ஹீனயானம் என்று பிரிந்து, ஒருத்தனோடு ஒருத்தன் அடித்துக்கொண்டான்

ஜைனத்தைப் பொறுத்தமட்டில் சுயதாம்பர, திகப்பர என்று என்னென்னவோ அம்பரங்களாகி இந்த கதிக்கு வந்தது. என்றால் உலகம் பூராவும் சமயத்திற்கு ஏற்றபடி வேடம் பூண்டு, மக்கள் தங்கள் அகங்காரத்தை வெளிப்படுத்திக்கொள்ள ஒரு கருவியாக அமைந்து விட்டது. ஏன்? சமயம் வாழ்வோடு அமையாமல், தத்துவமாக; வரட்டுத் தத்துவமாக; ஆராய்ச்சியாலும், வாதத்தாலும், விவாதத்தாலும், அறிவாலும் காணப்பட வேண்டிய ஒன்று என்று கருதப்படுகிற நிலை வந்தவுடன், இந்த நிலை வந்து விட்டது.

(வளரும்)

சிவ சிவ

# திருச்சிராப்பள்ளியில்
# இன்னிசைத் திருமுறை விழா

(ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் நினைவு ஸ்ரீதாயுமான ஈசர் நிதி)

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்

'கயிலைமாமுனிவர்'

**ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்**

அருளாணையின் வண்ணம் நடத்தப்பெறுவது

ருதிரோத்காரி ஆண்டு ஆவணித்திங்கள் 30 ஆம் நாள் (15—9—83)

ஆவணி மூலம் வியாழக்கிழமை இரவு 8 மணிக்கு

**ஸ்ரீ தாயுமானவர் சன்னதியில் தொடங்கப்பெறும்.**

திருமுறைவாணர்கள் :-

1 தமிழ்மறை இன்னிசைப் பண்மணிகள்
திரு. டி. எம். விசுவலிங்கம் சபாபதி சகோதரர்கள்,
திருவாவடுதுறை.

2 தேவார இசைமணி
திரு. எஸ் முத்துக்கந்தசாமி தேசிகர்,
ஸ்ரீ காசிமடம் கட்டளை ஓதுவார், திருச்சி.

தேவார இசைமணி

3 திரு. ப. ராமச்சந்திர ஓதுவார், விருத்தாசலம்.

4 இன்னிசைமாமணி, சங்கீர்த்தனரத்ன தேவார இசைமணி
திரு. எஸ். திருஞானசம்பந்தம்,
ஸ்ரீ சட்டநாதசுவாமி தேவஸ்தானம், சீர்காழி.

5. திரு. எஸ். தண்டபாணி தேசிகர், சென்னை.

9. திரு. எஸ். எல். சாமி, பிடில், திருச்சி.

7. திரு. எஸ் ஏ கோபாலன் - வேய்ங்குழல், சென்னை

8. திரு. கோ. வெங்கட்ராமன் - மிருதங்கம் திருப்பனந்தாள்.

ஆணைப்படி,

முத்து மெய்கண்டதேவன்,
மானேஜர், ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்.

---

குறிப்பு : ஆவணிமூல நாளில் நிகழ்த்தப்பெறும் பிற அறங்கள் :-

1. சிதம்பரத்திலும், மதுரையிலும், திருச்செந்தூரிலும் அன்னம் பாலிப்பு.
2. திருநள்ளாற்றில் ஸ்ரீ தர்ப்பாரண்யேசுவரர்க்கு விசேஷ அபிஷேக ஆராதனை.
3. காஞ்சிபுரத்தில் திருவேகம்பப் பெருமானுக்கு விசேஷ புனுகு தைலாபிஷேகம், சிவாச்சாரியர்களுக்கு அன்னம்பாலிப்பு.
4. மதுரையில் ஸ்ரீசொக்கலிங்கப்பெருமானுக்குச் சந்தன மெய்ப்பூச்சு பழனியில் சாதுக்களுக்கு அன்னம்பாலிப்பு

# ஆலய பூஜைப் படிக்காசு நிதிக்கு

## நன்கொடையளித்த அன்பர்கள் விபரம்

| | | |
|---|---|---|
| | 9—8—83 முடிய கூடுதல் ரூ | 15,346 - 50 |
| 1. | திரு. அப்பு, துர்க்காகுடில் | 5 - 00 |
| 2. | அன்பர் ஒருவர், திருப்பனந்தாள் | 15 - 00 |
| 3. | திரு. காளத்தீஸ்வரன், திருச்சி | 11 - 00 |
| 4. | திரு. N. பத்மநாப பிள்ளை, கடயநல்லூர் | 11 - 00 |
| 5. | திரு. N. அழகேசன், கு. கு. சு. தொடக்கப் பள்ளி திருலோக்கி | 10 - 00 |
| 6. | திரு. துர்க்காகுடில், அப்பு | 5 - 00 |
| 7. | திரு. சென்னை, சுப்ரபாலன் | 10 - 00 |
| 8. | திரு. தா. ம. வெள்ளைவாரணம் பனசை | 10 - 00 |
| | 6— 9 — 83 வரை கூடுதல் | 15, 423- 50 |

---

# ஸ்ரீ குமரகுருபரர்

## சமய இலக்கியத் திங்கள் இதழ்

### சந்தா விபரம்

| | | | |
|---|---|---|---|
| ஆயுள் சந்தா | (உள்நாடு) | | 100-00 |
| ,, | (வெளிநாடு) | | 125-00 |
| ஆண்டுச் சந்தா | (உள்நாடு) | | 7-50 |
| ,, | (ஸ்ரீலங்கா) | | 10-00 |
| ,, | (வெளிநாடு) | ரூ. | 12-00 |

### விளம்பரக் கட்டண விகிதங்கள்

| | | |
|---|---|---|
| அட்டை பின் பக்கம் 2 வண்ணங்கள் | ரூ | 150-00 |
| முன் அட்டை உள்பக்கம் | ரூ. | 125-00 |
| பின் அட்டை உள் பக்கம் | ரூ. | 100-00 |
| உள்முழுப்பக்கம் | ரூ. | 60-00 |
| உள்அரைப்பக்கம் | ரூ. | 30-00 |

# "தமிழின் நீர்மை"

'சித்தாந்த வித்தகர்'

ந. ரா. முருகவேள், M. A, M. O. L.

''தமிழின் நீர்மை பேசித், தாளம் வீணை பண்ணி, நல்ல
முழவம் மொந்தை மல்கு பாடல், செய்கை இடம் ஓவார்;
குமிழின் மேனி தந்து, கோல நீர்மை யதுகொண்டார்;
கமழும் சோலைக் கானூர் மேய பவள வண்ணரே!''
– சம்பந்தர்.

முன்னுரை :

இந் நிலவுலகின்கண் உள்ள பற்பல நாடுகளிலும், எத்துணையோ நூற்றுக்கணக்கான மொழிகள் வழங்கி வருகின்றன. சிறுசிறு கிளை மொழிகளைத் தவிர்த்து, உலகில் இதுபோழ்து வழங்கிவரும் மொழிகள் ஏறத்தாழ 2796 என்று, மொழி நூற்றுறை யறிஞர்கள் ஒருவாறு கணக்கெடுத்திருக்கின்றனர். அவைகள் அனைத்தும் ஒரே தரத்தன அல்ல. தத்தமக்கு அமைந்த இயல்புகளுக்கு ஏற்ப அவைகள் வெவ்வேறு படிநிலைகளை உடையன. அவற்றுள் மிகப் பெரும் பாலானவை ''திருந்தா மொழிகள் (Uncultivated Languages) என்னும் வகையைச் சேர்ந்தனவாகலாம். 'திருந்திய மொழிகள்' (Cultivated Languages) எனக் குறிப்பிடத் தகுந்த சிறப்புடைய மொழிகள் ஒரு சிலவேயாதல் கூடும். அவற்றுள்ளும், இலக்கண இலக்கிய நலங்களிற் சிறந்து, பழமையும் பெருமையும் வாய்ந்தவை, மிகச் சிலவேயாய் இருக்கும். அவை தம்முள்ளும் ஒரு சிலவே ''உயர்தனிச் செம்மொழிகள்'' (Classical Languages) எனப் புகழ்ந்து போற்றத்தக்கனவாகத் திகழ்கின்றன. அவ்வொருசில உயர்தனிச் செம்மொழிகளிலுங்கூட, எத்தனையோ பலமொழிகள் வழக்கிழந்து நிற்க, அமிழ்தினும் இனிய நமது அருமைத் தமிழ்மொழி யொன்றே, பல்லாயிரம் ஆண்டுகளாக உலக வழக்கு, நூல்வழக்கு என்னும் இருதிற வழக்கினும், தொன்றுதொட்டு இன்றுகாறும் நின்று நிலவி, இளமையாற்றலோடு வளங் குன்றாது, இனிது வழங்கி வளர்ந்து வருகின்றது.

உலகின்கண் உள்ள ஒவ்வொரு மொழியிலும் ஒவ்வொருவகைச் சிறப்பியல்பு உண்டு. அவ்வகையிற் கருதின், எல்லா மொழிகளும் தம்முள் ஓராற்றல் ஒத்த தன்மையுடையனவே என்பதில் ஐய மில்லை. ஆயினும், அமிழ்தினும் இனியநம் தமிழ் மொழியானது, தனக்கெனப் பல தனிப்பெருஞ் சிறப்பியல்புகளையுடையதெனக் குறிப்பிடுதல் இழுக்காகாது. தமிழ்மொழியின் தனிப்பெருஞ் சிறப் பியல்புகளைக் கூறுவது, பிறமொழிகளை எவ்வகையிலும் ஒருசிறிதும் இகழ்ந்ததாகாது.

சிறப்பியல்புகள் :-

(1) தமிழில் உள்ள எழுத்துக்களெல்லாம், மக்களுடைய நாவின் இயல்பையும் ஒலியியலின் இயல்பையும் ஆராய்ந்தறிந்து, இயற்கை நெறிக்கு ஏற்ப அமைக்கப்பட்டுள்ளன.

(2) உரப்பல் கனைத்தல் முதலிய அரிய முயற்சிகள் இன்றி, எளிமையும் இனிமையும் அமையத் தமிழ் எழுத்துக்களை யாவரும் ஒலித்தல் இயலும்.

(3) ஆங்கிலம் முதலிய மொழிகளில், ஓரெழுத்தே பல்வேறு ஒலிகளைக் குறிக்கப் பயன்படுவதுபோல் அன்றி, 'ஓர் எழுத்துக்கு ஓரொலி' என்னும் அறிவு நெறிக் கொள்கைக்குப் பெரும்பாலும் முரண்படாமல் தமிழ் எழுத்துக்கள் அமைந்துள்ளன.

(4) தமிழ் எழுத்துக்களின் ஒலியமைப்பியற்கை, தமிழ் மக்கள் வேறுபிற அயல்நாட்டு மொழிகளின் ஒலிகளையும், நன்கினிது திறம் பட ஒலிப்பதற்குத் துணைபுரியக் கூடியதாகத் திகழ்கின்றது.

(5) ஒருசில மொழிகள், தமக்கேஉரிய எழுத்தமைப்பினை உடையன அல்ல. எடுத்துக்காட்டாக, இத்தாலியன், ஃபிரெஞ்சு, ஸ்யானிஷ், ஆங்கிலம் முதலிய மொழிகள் தமக்கெனத் தனித்தனியே எழுத்தமைப்புக்களைப் பெறுமல், ஒரேவகை நெடுங்கணக்கினையே (Alphabet) கையாளுகின்றன. எழுதாக் கிளவியாக இருந்த வட மொழியும், தனக்கென ஓர் எழுத்தமைப்மைப் பெறுமையால், அவ் வவ்விடத்துக்கு ஏற்பத் தேவநாகரி கிரந்தம் முதலிய எழுத்துக் களால் எழுதப்படுகின்றது. ஆனல், தமிழ்மொழியே மிகப் பழங் காலந்தொட்டே தனக்கெனவுரிய ஒரு தனி எழுத்தமைப்பை உடைய தாக விளங்கி வருகின்றது.

(6) ஆங்கிலத்தில் 'அச்செழுத்துவகை' என இரு வேறு பிரிவுகள் உள்ளன; அரபிய மொழியில், மொழியில் முதலிடை கடைகளில் வரும் முறைகளுக்கேற்ப மெய்யெழுத்துக்கள் நான்கு வேறு வடிவங்களைப் பெறுகின்றன. மேலும், ஒரு மொழியே அதனைப் பேசும் மக்களின் மதம் பண்பாடு முதலிய வேறுபாடுகள் காரணமாக, வெவ்வேறு வகையான எழுத்துக்களால் எழுதப்படுவதுண்டு. உதாரணமாக, இந்திமொழியொன்றே, தேவநாகரி எழுத்தால் இந்து சமயத்தவர்களாலும், அரபி எழுத்துக்களால் இசுலாமிய சமயத்தவராலும் எழுதப்பட்டு, முறையே இந்துஸ்தானி உருது என்னும் வெவ்வேறு பெயர்களைப் பெற்று வழங்குகின்றது. தமிழில் இத்தகைய இடர்ப்பாடுகள் இல்லை.

(7) சில மொழிகளில் எழுதுவது ஒருவகையும், ஒலிப்பது பிறிதொரு வகையுமாக உள்ளது. ஆங்கிலத்தில் Put, But, Often, Depot முதலியன யாவரும் அறிந்த சொற்களே, இவ்வுண்மையை விளக்கப் போதிய சான்றாகும். ஜெர்மன் மொழியில் 'ரூட்டர்' 'ஃப்ரூட்' என எழுதிவிட்டு, 'ராய்ட்டர்' 'ப்ஃராய்ட்' என ஒலிக்கின்றனர். வடமொழியிலும் ப்ரம்ஹ்ம சிஹ்ம வஹ்நி: விஜ்ஞானம் என எழுதிவிட்டு, முறையே ப்ரம்ஹ சிம்ஹ வந்ஹி: விஞ்ஞானம் என்றொலிக்கின்றனர். இங்ஙனம் எழுதுவது ஒருவகையும், ஒலிப்பது பிறிதொரு வகையுமாக இருத்தலால், நேரும் இடர்ப்பாடுகட்கு எல்லையே இல்லை. ஒலிப்புக்கென்றே மிகப் பெரிய விளக்க நூல்கள் வெளியிட வேண்டிய இன்றியமையாமை, ஆங்கிலம் முதலிய மொழிகளில் காணப்படுகின்றது*. வல்லொலி மெல்லொலி மாற்றம் தவிர, இத்தகைய குறைபாடுகள் தமிழில் இல்லை எனத் துணிந்து கூறலாம்.

---

*"In the English tongue we speak
Why is 'break' not rhymed with "freak"?
Well, you tell me why it is true,
We say 'Sew' but likewill 'J-w'?
'Beard' sounds not the same as 'heard'
'Cord' is different from 'word'
And since 'pay' is rhymed with 'Say'
Why not 'Paid' with 'said', I pray?
'Cow' is 'cow' but 'low is low'
'Shoe' is never rhymed with foe
And, in short, it seems to me
Sound and letters disagree......" — Lord Crower

"The English spelling is an international disaster".
— G. B. Shaw

(8) தமிழிலுள்ள சொற்கள் எல்லாம் பெரும்பாலும் மிகக் குறுகியனவாய், ஓரசை ஈரசைகளாலேயே இயன்றுள்ளன. "நாகரிகம் எய்தப் பெறாத எளிய மக்கள் பேசும் மொழியின் சொற்கள், அவர்கள் கையாளும் கருவிகளைப் போலவே, திருத்தமும் செம்மையும் பெறாமல், மிக நீளமாக இருக்கும்" என்பது, மொழிநூல் அறிஞர்கள் கண்டறிந்த உண்மையாகலின், தமிழில் வழங்கும் சிறு சிறு சொல்லமைப்பே, அதன் பழம்பெரு நாகரிகத்தினையும், பண்பாட்டினையும் அறிவிக்கும் சான்றாக அமையும்.

(9) தமிழிற் பகுத்தறிவுடைய மக்களை உயர்திணை என்றும், பகுத்தறிவு இல்லாத உயிரையும், உயிரில் பொருள்களையும் அஃறிணை என்றும் பாகுபாடு செய்து விளக்கியிருப்பது, பாராட்டற்குரியதாகும்.

(10) அங்ஙனமே சொல் நோக்கி ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும், இரண்டையும் அலியாகவும், மனஞ் சென்றவாறு செயற்கைப்போலி நெறியிற் கூறியொழிந்து பிழைபடாமல், பொருள் நோக்கி இயற்கைக்கு ஏற்பத் தமிழிற் பால்கள் வகுக்கப்பட்டுள்ளமையும், மிகவும் மகிழ்தற்குரிய செய்தியாகும். வடமொழியில் 'மனைவி' என்னும் ஒரு பொருளே குறிக்கும் பார்யா–தாரா–களத்ரம் என்னும் மூன்று சொற்களும், முறையே பெண்பால் ஆண்பால் அலிப்பால் எனக் கொள்ளப்படுகின்றன. கல்லின் பெயர்களாகிய பாஷாண–சிலா–உபலம் என்னும் சொற்கள் மூன்றும், முறையே ஆண்பால் பெண்பால் அலிப்பால் எனக் கருதப்படுகின்றன. தமிழில் இத்தகைய செயற்கைக் கற்பனைப் பாகுபாடுகள் சிறிதும் இல்லாமை கருதற்பாலது.

(11) தமிழில் உள்ள வினைச் சொற்கள், திணை-பால்-எண்-இடம்-காலம் என்பவற்றைக் காட்ட வல்லனவாக விளங்குதல் போல, வேறு சில மொழிகளிற் காண்டல் அரிது. ஒரு சில மொழிகளில் பெயர்ச்சொற்கள் போலவே, உரிச்சொற்களும், வேற்றுமையுருபுகள் ஏற்பதுண்டு. அம்முறை தமிழில் இல்லாமை கற்பார்க்கு எளிமை பயக்கின்றது.

(12) தமிழ்ச் சொற்களின் பகுதி விகுதி முதலிய உறுப்புக்கள், மிக எளியவரும் தாமே கருதியுணர்ந்து கொள்ளத்தக்க இயல்புடையன. பிற சில மொழிகளிற்போலச் செயற்கை நெறிகளிலும், வெறும் கற்பனை முறைகளிலும், சொற்களின் பகுதி விகுதிகள் தமிழில் வகுக்

கப்பட்டில்லாமை அறிவு வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரிகின்றது. தமிழில் ஒரு சொல்லிற் பகுதி விகாரப்படினும், முற்றும் மாறாது நிற்கும். பிற மொழிகளில் வினைப்பகுதிகள் இயல்பாலும், காலம் இடங்களாலும், பகுதியின் வடிவத்திற்குத் தொடர்பேதும் இல்லாத வடிவங்களை அடைதலுண்டு.

(13) ''பன்னீருயிரும் க ச த ந ப ம வ ய ஞ ங ஈரைந்து உயிர் மெய்யும் மொழிமுதல்'' எனச் சொற்களின் முதலில் வருவன 22 எழுத்துக்களே எனவும்; ''ஆ வி ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள மெய் சாயும் உகரம் நாலாறும் ஈறே'' எனச் சொற்களின் இறுதியில் வருவன 24 எழுத்துக்களே எனவும் பிறவாறும், தமிழிலக்கணம் ஆராய்ந்து அளந்து வரையறை செய்து கூறியிருப்பது மிகவும் வியக்கத்தக்க செய்தியாகும்.

(14) ஆசிரியர் சிவஞானசுவாமிகள், தமது தொல்காப்பியப் பாயிரவிருத்தியில், ''தமிழ் மொழிப்புணர்ச்சிக்கட்படுஞ் செய்கைகளும் குறியீடுகளும், வினைக்குறிப்பு வினைத்தொகை முதலிய சொல்லிலக்கணங்களும், உயர்திணை அஃறிணை முதலிய செற்பாகுபாடுகளும் அகம் புறம் என்னும் பொருட் பாகுபாடுகளும், குறிஞ்சி வெட்சி முதலிய திணைப்பாகுபாடுகளும், அவற்றின் பகுதிகளும், வெண்பா முதலிய செய்யுளிலக்கணமும், இன்னோரன்ன பிறவும் வடமொழியிற் பெறப்படா'' எனக் கூறியிருப்பது, ஈண்டுக் குறிக்கொளத் தக்கது.

(15) பிறமொழி மதம் பற்றிப் பவணந்தியார் இடுகுறிப் பெயர் உடன்பட்டவராயினும், ''மொழிப் பொருட் காரணம் விழிப்பத் தோன்றா'' எனவும், ''எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே'' எனவும், ஆசிரியர் தொல்காப்பியர் அருளிச் செய்திருத்தலின், தமிழில் எல்லாச் சொற்களும், அறிவார்ந்த முறையிற் காரணம் பற்றி அமைந்தனவே என்பது அறியப்படும். ''ஆசிரியர் தொல்காப்பியனார் யாதானுமோர் காரணம் பற்றியே குறியிட்டு ஆளுதலல்லது, வடநூலார் போலக் காரணம் பற்றாதும் குறியிட்டு ஆளுதல் யாண்டும் இல்லை'' எனச் சிவஞானசுவாமிகள், தமது 'தொல்காப்பிய முதற் சூத்திர விருத்தியிற் குறித்திருப்பதும், ஈண்டு நாம் உணர்தற்கு ஏற்புடையது.

(16) ஏனைய மொழிகள் எல்லாம், எழுத்து, சொல், சொற்றொடர், செய்யுள் என்பன போன்றவற்றிற்கு மட்டுமே, ஓரளவு இலக்கணம் உடையனவாக, அவற்றாற் குறிக்கப்படும் பொருளுக்கும்கூட, தமிழ்

மொழி இலக்கணம் வகுத்திருக்கின்றது. அதுபற்றியே யன்றே, பரிபாடலின்கண் ''தள்ளாப் பொருளியல்பிற் றண்டமிழ்'' எனத் தமிழ் மொழியினைச் சான்றோர்கள் போற்றுவாராயினர் என்பது.

(17) மக்களின் வாழ்க்கையினை அகம் புறம் என இரண்டாகப் பகுத்து, மக்களாயினோர் தம் வாழ்க்கையில் இன்றியமையாது எய்தற்பாலனவாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றையும், அவற்றோடு தொடர்புடைய காதல் வீரம் முதலிய பற்பல செய்திகளையும் எல்லாம் ''புலநெறி வழக்கம்'' பற்றி மிகவும் விரிவாக விளக்கிக் கூறியிருப்பது, தமிழிலக்கணத்தின் தனிப்பெரும் சிறப்பியல்புகளுளெல்லாம் தலைசிறந்தொன்றாகும்,

(18) ஆங்கிலமொழியானது, உலகப் பெருமொழிகளுள் ஒன்றாக இன்று திகழ்கின்றதெனினும், அதன் இலக்கணம் இன்னும் போதிய திருத்தமும் செம்மையும் எய்தவில்லை என்று அறிஞர்கள் ஆராய்ந்து கூறி வருகின்றனர். ஆனால் ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, தமிழில் தொல்காப்பியம் என்னும் தூய சிறந்த முழுமுதல் இலக்கண நூல் அமைந்திருப்பது, மிகப்பெரிதும் வியந்து போற்றுதற்குரியது. தமிழ் மக்கள் கண்டுணர்ந்து கடைப்பிடித்த நூற்பா அமைப்பு, சுருங்கச் சொல்லல் விளங்கவைத்தல் நவின்றோர்க்கினிமை நன்மொழிபுணர்த்தல் ஓசையுடைமை ஆழமுடைத்தாதல் முதலிய பத்துவகை அழகுகளும் பயின்று, எத்தனை மாட்சிமைமிக்கு இலங்குகின்றது; நூற்பாக்களைக் காரண காரிய முறை பிறழாமலும், முன்னொடு பின் முரணாமலும், பிறவாறும் அமைந்திருக்கும் திறமும், அவற்றிற்கு இளம்பூரணர், சேனாவரையர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் முதலானோர் வரைந்திருக்கும் அரிய பெரிய உரை விளக்கங்களும் பிறவுமெல்லாம், நினைத்தொறும் நினைத்தொறும் வியப்பும் விம்மிதமும் விளைவிக்க வல்லன அன்றோ?

(19) உலகத்திற் பலமொழிகள் காலத்திற்குக் காலம் திரிந்து சிதைந்து மாறுபடுகின்றன. போவுல்ப், கேட்மான் காலத்தில் வழங்கிய ஆங்கிலமொழி சாசர் காலத்திலும், சாசர் காலத்திய மொழி செகப்பிரியர் காலத்தும், அது தேனிசையன் காலத்திலும், எத்தனை எத்தனையோ மாறுதல்களை அடைந்துள்ளன. மோசே முனிவர் பேசிய எபிரேய மொழியும், இயேசுநாதர் பேசிய அரமைக் மொழியும், புத்தர்பிரான் பேசிய பாலிமொழியும், மகாவீர வர்த்தமானர் பேசிய அர்த்தமாகதி மொழியும், பிறவும் இன்று உலகவழக்கு அற்று, பெரிதும் நூல்வழக்கில் மட்டுமே இருந்து வருகின்றன.

ஆனால் தமிழ்மொழியானது கடந்த இரண்டாயிரம் மூவாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகவே மாறாமலும் சிதையாமலும், ஒரே நிலையிற் 'கன்னித்தமிழ்' எனச் சிறப்பிக்கப்படுவதற்கு ஏற்ப, இன்றும் யாவர்க்கும் எளிதிற் புரியும் வகையில் நிலைபெற்று, இனிது நிலவி வருகின்றது. உலக மொழிகளின் வரலாற்றில் இஃதொரு விந்தையே யாகும்.

(20) ''எங்களுடைய மொழி செகப்பிரியரும், மில்ட்டனும் பேசிய மொழி, விவிலிய நூலைப் பெற்றுள்ள மொழி'' (Ours is the Language of Shakespeare, Milton and the Bible) என்ற ஆங்கிலமொழியினைப் பற்றிக் குறிப்பிட்டு அறிஞர் ஒருவர் (George Bernard Shaw, in Pygmalion), பெருமிதம் கொள்கின்றார். அம் முறையில் நாமும், நம்முடைய தமிழ்மொழியைத் தொல்காப்பிருயம் திருவள்ளுவரும் இளங்கோவடிகளும் பேசிய மொழி என்றும், ஆழ்வார்களும் நாயன்மார்களும் முறையே திவ்யப் பிரபந்தங்களும் திருமுறைகளும் பாடியருளிச் செய்த தெய்விக மொழி என்றும கூறிப் பெருமிதப்பட்டுக்கொள்ளலாம.

(வெண்பா)

செகப்பிரியர் பேசிய சீர்மொழி என்று
மிகப்பெரிதும் கொள்கின்றார் வீறு; - தகச்சிறிதும்
வள்ளுவர், தொல் காப்பியனார்வாய்மலர்ந்த செந்தமிழ் என்று
உள்ளிஇன் புற்றிலோம் நாம்.

அப்பர்சம் பந்தர்ஆ ரூரர் மணிமொழியார்
இப்புவியிற் பேசி, இறையருளைத் — தித்திப்பாய்ப்
பாடிப் பரப்பிய, நம் பண்பார் தமிழ்மொழிக்கு,
ஈடிணையாய் எம்மொழியும் இல்!

# திருப்பணி கொள்ளும் திருநாரையூர்

தென்ஞர்க்காடு மாவட்டம் காட்டுமன்ஞர்குடி வட்டம் திருநாரையூர் அருள்மிகு சுயம்பிரகாச சுவாமி ஆலயத்திருப்பணி வேலை திருப்பனந்தாள் கயிலைமாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் அருளாசியினுல், துன்மதி ௵ தைமீ 30௳ [12—2—82] அன்று துவக்கப்பெற்று, சிதம்பரம் திரு. G. வாகீசம்பிள்ளை அவர்களைத் திருப்பணிக் கமிட்டி தலைவராகக்கொண்டு நடைபெற்றுவருகின்றது. அன்பர்கள் திருப்பணிவேலைக்கு த்தாராளமாக நன்கொடை அளித்து ஸ்ரீ பொல்லாப்பிள்ளையாரின் அருளுக்குப் பாத்திரராகக் கேட்டுக் கொள்ளப்படுகிறுர்கள்.

S. திருநாவுக்கரசு பிள்ளை,
பொருளாளர்,
திருப்பணிக்கமிட்டி,
9, கனகசபைநகர், சிதம்பரம்.

## நால்வர் நான்மணிமாலை

—மூலமும் விருத்தியுரையும்.

★★★

நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகள் அருளிச் செய்த நால்வர் நான்மணிமாலை மூலமும், சிதம்பரம் ஈசானிய மடம், ராமலிங்க சுவாமிகள் இயற்றிய விருத்தியுரையுமாக சிதம்பரம் ஸ்ரீமௌன தேசிகர் ஆதினம் ஸ்ரீமத் சபாபதி சுவாமிகள் எழுதிய குறிப்புரையுடன் குமரன் செந்தமிழ் நூற்பதிப்புக் கழக வழி வெளிவந்த நூல்.

விலை ரூ. 2-50 கெட்டிக் கட்டடம் ரூ. 3-50

**கிடைக்குமிடம்:-**

மௌன சுவாமிகள் மடம்,
39, சபாநாயகர் தெரு,
சிதம்பரம் — 608 001

************************

# திருமூலர் திருமந்திரம்

************************

சொ. சொ. மீ. சுந்தரம், எம். காம்.,

## ''அப்பா'' எனில் அப்பன்.

''நினைப்பவர் மனம் கோயிலாய்க் கொண்டவன்'' இறைவன். அவன் எப்படி இருப்பான் என்று கேட்டால் என்ன சொல்வது? நினைப்பவர் நினைப்பளவு இருப்பான் அப்பா என்றவர்க்கு அப்பனாய் இருக்கிறான். திருச்சிராப்பள்ளியில் மகப்பேறு காலத்தில் வருந்திய பெண் ''அம்மா'' என்று அழைக்கச் சிவபெருமான் அவள் தாய் போல வந்து துயர்தீர்த்து, தாயுமானவன் எனப்பெயர் பெற்றான். பன்றிக்குட்டிகளுக்குப் பாலூட்டத் தாய்ப் பன்றியாகத்தானே தோன்றினான். இவ்வளவு எளிமையாக இருப்பவன் யார் தெரியுமா? முன்னாளிலிருந்தே சமமாக வைத்து எண்ணப்பட்ட பிரமன் திருமால் உருத்திரன் என்ற மூவர்க்கும் மூத்தவனாக இருப்பவன். தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத் தலைமகன். பொன் போன்ற போதகத்தில் உள்ளவன். போது (தாமரை) அகம் (வீடு) என்று போற்றப் பெறும் பிரமரந்திரத்தில் பொன் போல் ஒளிவிடும் அரிய பிரான் இவ்வாறு எளிமையாக இருக்கிறான்.

முன்னையொப் பாயுள்ள மூவர்க்கு மூத்தவன்;
தன்னையொப் பாயொன்றும் இல்லாத் தலைமகன்;
தன்னையப் பாவெனில் அப்பனுமாய் உளன்;
பொன்னையொப் பாகுறன் போதகத் தானே. (7)

போதகம் என்பதை மனத்தாமரை எனக்கொண்டு, ''வெள்ளத் தனைய மலர்நீட்டம்'' போல மாந்தர்தம் எண்ணத்தளவில் இறைவன் இருக்கிறான் என்றும் பொருள் கொள்ளலாம்.

''என்னை அப்பா அஞ்சேல் என்பவர் இன்றி நின்று
எய்த்தொழிந்தேன்
மின்னை ஒப்பாய்! விட்டிருதி கண்டாய்— உவக்கின் மெய்யே
உன்னை ஒப்பாய்! மன்னும் உத்தரகோசமங்கைக் கரசே!
அன்னை ஒப்பாய்! எனக்கத்தன்! என் அரும்பொருளே!''

என்ற நீத்தல் விண்ணப்பப் பாடலில் வரும் ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது.

தீயைவிட வெம்மையானது உண்டா? தண்ணீரை விடத்தண்மையானது உண்டா? தாயைவிட நல்ல கருணையாளர்கள் உண்டா? என்று கேட்டால் அதற்கு விடையாக "உண்டு அதற்குப் பெயர் தான் கடவுள்" என்று சொல்கிறார் திருமூலர். பகைவருக்குத் தீயைவிட வெம்மையானவன் இறைவன். இறைவனுக்குப் பகைவரும் இல்லை, நண்பரும் இல்லை. ஆனால் தீயவழியில் செல்லும் தீயவரைத் திருத்தத் தீயினும் வெய்யனாகச் சிவபெருமான் மறக் கருணை காட்டுகிறான். அறிவில்லாமல், வைக்கப்பட்ட அனைத்தையும் எரிப்பது தீ. நம் வினைகளை, அறிவுத் தொடர்பால், எரித்துப் பக்குவம் செய்பவன் ஆண்டவன். எனவே தீயைவிட மேலானவன். அடியார்களுக்குத் தண்ணீரைவிடக் குளிர்ச்சியானவன். நீரால் உடம்பு சுத்தமாகும். வெய்யில் அதிகப்பட அதிகப்படத் தண்ணீரின் தண்மை குறையும். வினைத்துன்பம் எவ்வளவு அதிகமானாலும் சிவபெருமானுடைய அருளான தண்மை குறைவதில்லை, எனவே அவன் புனலினும் தண்ணியன்.

பெற்ற பிள்ளை தந்தையின் பெயரைக் காப்பாற்றி "இவன் தந்தை என்நோற்றான் கொல்?" என்று உலகம் பாராட்டச் செய்யும். சிவபெருமான் பிள்ளையைப்போல ஆன்மா பிறவி எடுத்த தன்பலனை அடையச்செய்கிறான். பிள்ளைகள் தந்தை பெயரைக்கெடுப்பதும் உண்டு. ஆனால் சிவபெருமான் ஆன்மாக்களுக்குக் கேடு சூழ்வாரையும் கடியவல்லன். எனவே அவன் சேயினும் நல்லன் அன்பர்க்குப் பக்கத்திலே இருக்கும் அணியன். ஆணவத்தால் உலகையே அழிக்கின்றேன் என்று கங்கை வேகமாகப் பூமியில்பாய்ந்தபோது அவள் "வேகம்கெடுத்தாண்ட வேந்தன்". அவள் வேகத்திலிருந்து உலகைக் காக்கத் தன்னுடைய சடையை விரித்தபடி நின்று கங்கையை அடக்கிக் கருணை செய்த தாழ்சடையன்இந்தப பெருமான் தாயினும் நல்லவனாகத்திகழ்கிறான். எடபடி?

மூன்று தாய்மார்கள் தண்ணீர் இறைக்கக் கிணற்றங் கரைக்குப் போனார்கள். முதலாவது தாய் தன்குழந்தைக்குப் பாலூட்ட வேண்டிய நேரம் நெருங்கிவிட்டதே எனநினைத்தாள். உடனே அவளுக்குப் பால் சுரந்தது. இரண்டாவது தாய் வீட்டிற்கு வந்து குழந்தையைப் பார்த்தாள். பார்த்ததும் பால் சுரந்தது மூன்றாவது தாய் குழந்தையைத் தூக்கி மடியில் வைத்தாள். குழந்தை வாய் வைத்ததும் பால் சுரந்தது. இந்த மூவரில் பால் நினைந்தூட்ட

எண்ணியதும் பால் சுரக்கப் பெற்ற முதல்தாயே முதலாவதுதாய். இந்தத் தாயினும் நல்லவன் பெருமான். பால்நினைந்தூட்டும் தாய் இந்த உடம்புக்கு உணவு தந்து காப்பாற்றுவாள். இறைவன் இப், பிறவி ஆட்கொண்டு இனிப் பிறவாமே காப்பான். தாயன்பிற்கும் எல்லையுண்டு. இல்லானை இல்லாளும் வேண்டாள். மற்று ஈன்றெடுத்த தாய் வேண்டாள். ஆனால் சிவபெருமானோ யார்பாலும் வெறுப்-பற்றவன். எனவே தாயினும் நல்லவன் இத்தகைய ஈசன் அருளை அறியமாட்டாமல் மனிதர்கள் கண்டதே காட்சி கொண்டதே கோலமாய்த் திரிகின்றார்களே என்று வருந்துகிறார் திருமூலர்.

தீயினும் வெய்யான், புனலினுந் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருள்அறி வாரில்லை;
சேயினும் நல்லன், அணியன்நல் லன்பர்க்குத்
தாயினும் நல்லன், தாழ்சடை யோனே. (8)

''தாயினும்நல்ல சங்கரனுக்கு'' அன்பராக இருத்தல் அவன் அருளைப் பெற்று இன்புறலாம். சிவபெருமான் நல்லவர்க்கு நாதனாகவும் அல்லாதார்க்கு அல்லாதவனாகவும் காட்சி அளிக்கிறான் என்பது இப்பாடலின் கருத்தாகும்.

தன்னால் தொழப்படாத் தலைவன்

இறைவனை நாம் வழிபாடு செய்கின்றோம். ஆடியும் பாடியும் அழுதும் அரற்றியும் வழிபடுகிறோம். மறந்தும்புறந்தொழா மாந்தர்களான அடியார்கள் சிவபெருமானைத் தொழுவதே பேரின்பம் எனக் கொள்கிறார்கள். இறைவனுடைய குனித்த புருவத்தையும் கொவ்வைச்செவ்வாயில் குமிழ்சிரிப்பையும் காணக்கூடிய பேறுகிடைக்குமானால் மனிதப்பிறவிஎடுக்கவும் தயாராக இருக்கும் அப்பரடிகள் அருள் மனம் அடியார்களுக்கு உண்டு. இப்படி நாம் இறைவனைத் தொழுகிறோம். இறைவன் யாரைத்தொழுகிறான்? அவனுக்கு மேற்பட்டவர்கள் யாராவது இருந்தால்தானே அவன் தொழுவான்? எனவே அவனுக்கு யாரையும் வழிபட வாய்ப்பில்லை. அவன் சேர்ந்தறியாக் கையானாக விளங்குகிறான். அவனே அவனைத் தொழுவதுமில்லை. அவன் யாரையும் தொழுவதும் இல்லை. ''என்னால் தொழப்படும் எம் இறை, பின்னால் பிறங்க இருந்தவன்'' என்கிறார் திருமூலர்.

ஆலயங்களில் சிவபெருமானுக்குப் பின்புறம் அடிமுடி காட்டா நாதரான அண்ணாமலையார் ''இலிங்கோத்பவர்'' என்ற பெயரில்

காட்சியளிப்பார். ஆண்டவன் சோமாஸ்கந்தமூர்த்தியாக உருவிலும், சிதம்பர ரகசியமாக அருவிலும், இலிங்கவடிவாக அருஉருவிலும் காட்சியளிக்கிறுன். அருவையும் உருவையும் இணைப்பது சிவலிங்கம். நம் உடம்பில், நாம் காணும் பகுதியைத் தூலதேகம் என்பர். இதனுள்ளே காணமுடியாத சூக்கும தேகம் உண்டு. இவை இரண்டையும் இணைப்பது தலையின் பின்புறம் முகுளமாக இருக்கும் பகுதி. உயிராற்றலின் தனிபீடமான இந்த இடத்தைத்தான் ''பின்னல்'' என்கிறார் திருமூலர். அருள்மயமான கதிர்கள் பொன்னொளி வீச நந்தி என்ற பெயர் தாங்கிப் பிறப்பு இறப்பு அற்றவனாக, இந்த பின்பகுதியில் இருக்கும் சிவபெருமான் எல்லோருக்கும் மேலானவன். அவனை நாம் வணங்கினால், வேறு யாரையும் பணியத் தேவையில்லை என்பதைக் கீழ்க்கண்ட பாடலில் உணர்த்துகிறார் திருமூலர். ''பிறப்பிலியை வணங்குபவர் பிறப்பிலாரே'' என்றபடி சிவனை வணங்கினால், வேறுயாரையும் பணியவேண்டாம் என்பது பெறப்படுகிறது.

பொன்னால் புரிந்திட்ட பொற்சடை என்னப்
பின்னால் பிறங்க இருந்தவன் பேர்நந்தி
என்னால் தொழப்படும் எம்இறை மற்றவன்
தன்னால் தொழப்படு வாரில்லை தானே. (9)

(வளரும்)

# வெளிவந்துவிட்டன

1. திருக்குறள் உரைக்கொத்து அறத்துப்பால்
விலை ரூ. 7-50
(திரு. கோ. வன்மீகநாதன் ஆங்கிலமொழி பெயர்ப்புடன்)
2. சிவப்பிரகாசம் விலை ரூ. 2-50
(திரு. கு. சுந்தரமூர்த்தி விளக்கவுரையுடன்)
3. நீதிநெறிவிளக்கக் கருத்தரங்கக் கட்டுரைகள
விலை ரூ. 3-00

தகவல்களுக்கு :- மேலாளர், ஸ்ரீகாசிமடம்
திருப்பனந்தாள் 612 504

# விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதன்

ந. லலிதா எம். ஏ,

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் — விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

எனும்படி எவ்வினையைத் தொடங்கும் முன்னும் விநாயகப்பெருமானை வணங்கித் தொடங்குதலே நம்மனோர் மரபு. எண்ணிய எண்ணியாங்கு எய்தப் பெறும் திண்மையினைத் தரவல்லவர் கணபதியே.

'அகளவடி வானபர மானந்தனேனும் மெய்யடியவர்க டம்மை' யாளவந்த அருட்திறத்தின் பெருமைதனை ஈண்டுக் காண்போம்.

உருவிலடங்காத் திருவுடையோன் :-

பெருமான் தன் உருவம் சிறியதாயினும் ஆற்றல் அளவிடற்கு அரியது. அவர் குறளுடல் கொண்டே பல்லுருக் கொண்டமையினைச் சிற்ப நூல்கள் சிறப்புறப் பேசும். அவை பேசுமாறு அமைந்த திருவுருவங்கள் முப்பத்திரண்டாம். அறுபத்து நான்கு என்பதும் ஒரு சாரார் கருத்து.

1. பால கணபதி. 2. தருண கணபதி 3. பக்த கணபதி 4. வீர கணபதி 5. சக்தி கணபதி. 6. துவஜ கணபதி. 7. சித்தி [பிங்கல] கணபதி. 8. உச்சிஷ்டகணபதி. 9. விக்கினகணபதி. 10. க்ஷிப்ரகணபதி. 11. ஏரம்ப கணபதி. 12. லட்சுமி கணபதி. 13. மகா கணபதி 14. விஜய கணபதி. 15. நிருத்த கணபதி. 16. ஊர்த்துவ கணபதி. 17. ஏகாட்சர கணபதி. 18. வரகணபதி. 19. திரயாக்ஷர கணபதி 20. க்ஷிப்ரபிரசாத கணபதி. 21. ஹரித்திரா கணபதி. 22. ஏகதந்த கணபதி. 23. சிருஷ்டி கணபதி. 24. உத்தண்ட கணபதி: 25. ரணமோசன கணபதி. 26. துண்டி கணபதி. 27. துவிமுக கணபதி. 28. மும்முக கணபதி. 29. சிங்க கணபதி. 30. யோக கணபதி. 31. சங்கடஹர கணபதி 32. துர்காகணபதி.

உள்ளொளி யூட்டும் உருவச் சிறப்பு :-

பெருமான் திருவுருவம் பிரணவ வடிவை உடையது. பிரணவ ஸ்வரூபன் எனும் திருநாமம் இப்பொருள் பற்றியதே. மந்திரத்துள் தலைமைச் சிறப்புடையது பிரணவம் எனப்படும் ஓங்காரமே. அ+உ+ம் எனும் மூவொலியியையபே பிரணவம், 'ப்ரண' என்பது பழைய என்ற பொருளைக் கொண்டது. எனவே இவ்வொலி மற்றெல்லா வற்றிற்கும் முன் தோன்றி ஒலிக்கும். இயற்கையிலேயே இயங்கும் தலைமைச் சிறப்புடையொலியாம். இதயம், மூளை, இரைப்பை, மலக்குடல், சிறுநீர்ப்பை, கருப்பை, காது போன்ற மானுட உறுப்புக்கள் பலவும் இம்மந்திர வடிவாயமைந்திருத்தல் நோக்கத்தக்கது

சிவபெருமான் ஆணும் பெண்ணுமியைந்த அர்த்தநாரியாய் விளங்குதல் போன்று இப்பெருமானும் ஒருபுறம் மருப்புப்பெற்றும், மறுபுறம் பெறுதும் — ஆணும் பெண்ணும் அற்ற தன்மையராய்க் காட்சிதருதல் காணலாம். சிவனுக்குரிய சடை, பிறை, முக்கண் ஆகியவையும், அம்மைக்குரிய அங்குசம், பாசம், ஒற்றைக்கொம்பு என்பனவும் பெற்றுச் சிவசக்தி சொரூபத்தைக் குறிக்கும் இன்ப அன்பு வடிவமாயிலங்குகின்றமை அறியலாம். உடற்பகுதியில் கால்கள் தேவவுருவிலும், நடுவுடல் மானுடவுருவிலும் தலை அஃறிணையுருவிலும் இருப்பது எல்லாவற்றுள்ளும் விரவி நிற்பவர் விநாயகர் என உணர்த்தும்.

பெருமான் கைப்பொருள்களுள் பாசம் படைத்தலையும், அங்குசம் அழித்தலையும், ஒற்றைக் கொம்பு காத்தலையும், துதிக்கை மறைத்தலையும், மோதகம் அருளலையும் உணர்த்தும். விநாயகர் வரம்பில் இன்பம் உடையவர் என்பதைப் பிறை குறிக்கும். அமுத கலையோடு கூடியது சந்திரன். ஞானவடிவான பெருமான் திருமுடியில் விளங்குவது ஞானசந்திரகலை. சந்திரன் சூரியன் அக்கினி ஆகிய மூன்று கண்களும் செம்மைத் திருமேனியும் ஒளிவடிவாயவர் என்பதை உணர்த்தும் அவரது கையில் உள்ள மோதகம் பரிபக்குவ நிலை எய்திய பின் பெறப்போகும் பேரின்பத்தினைக் குறிக்கும். தொகுமொத்தத்தில் உருவில் வேறுபாடு இருப்பினும் அவருருவம் ஞான உருவமே ஆகும்.

அரும் பொருள் நவிலும் அவயங்கள் :-

யானைமுகம்;- யானை நாததத்துவமிடமாகத் தோன்றுவது; ஆகவே பரநாத வடிவினராய பெருமானும் யானை முகம் ஏற்றார்

மும்மலமாம் மதம் உற்றுப் போதமுழுத் தறியற வீசி
முகிழ்த்தலர் அன்பின்சங்கிலி உதறி, முதிர்ந்த அருட்கூடத்து
இம்மென நீங்கி வெளிக்கொடு புவனமெனும் கடுவனம் ஓடி,

எப்பாகர்க்கும் அடங்கலவாகி இயங்கும் உயிர்க்கரிகள் எனும்படி மும்மல மதங்கொண்டு அறிவுத்தூண் அறவே நீங்கி அன்புச் சங்கிலி இற்று வீழவும், அருட் கூடத்தினின்றும் அகன்றும் பாகர்க்கடங்காது உலகக் காட்டில் ஓடித் திரியும் யானையாகிய உயிர்களைத் துரத்திப் பிடித்துத் தூண்டில் போடுவது யானையால் யானையாத்ததாம்.

'அலையும் மனத்தையும் நிலையில் நிறுத்திடும் அருள் உருவே என்ற தொடர் உணர்த்தும்.

யானைமுகம் இன்பந்தருதலைக் குறிப்பது. அது போன்று எந்நாளும் இன்பம் தருதலைக் குறித்து நிற்கும் பொருட்கள் உலகில் மூன்று; 1. நிலவு. 2. கடல். 3. யானை. இதனை,

'There are three things in the world which never satiate a person and these are the moon, the sea and an elephant.... Vinayaka has this elephant face just to give us this type of delight all the time. (Heritage of Bharata Varsha and Sanatana Dharma by Shri Jnyendra Saraswati Swamigal.) என்ற தொடர்கள் உரைக்கும்.

முக்கண்கள் : சிவபெருமானை யடுத்து விநாயகருக்கும் மூன்று கண்கள் உண்டு. இரண்டு கண்கள் புறவுலகைக் காண்பதற்கும் மூன்றாவதாயமைந்த நெற்றிக்கண் அகவுலகை நோக்குதற்கும் துணை நிற்கும். இது அபரஞானத்தையும் பரஞானத்தையும் சுட்டிக் காட்டுகிறது. இம்மை மறுமை இரண்டனையும் உள்ளபடி அறிதலே அறிவுடைமையாம்.

காதுகள் :- செவிகள் தன்னை வழிபடும் அடியவர்கள் அங்கிருந்து எப்பொழுது நினைத்துத் தம்முடைய குறைகளைக் கூறினும் அவற்றை

அசட்டை செய்யாது செவிமடுப்பவர் பெருமான் என்ற பொருளைக் காட்டுகின்றது. அவர்தம் பெரிய செவிகள், குறைந்த பேச்சினையும் அடியவர்தம் குறைகளைக் கேட்கும் நிறைந்த கேள்வியினையும் உடையவர் என்ற பொருளை உணர்த்தி நிற்கும்.

ஐந்து கரங்கள் :- ஐங்கரங்கள் பறை முதலாய பஞ்ச சக்திகளைப் பெற்ற வெற்றியைப் புலப்படுத்தும். மேலும் ஐந்தொழிலாற்றலையும் ஐம்மல அழித்தலையும் காட்டும். கருணை கொண்டு வழிபடுபவர்க்கு இரங்கி வேண்டுவன செய்யவே முன்னே நீளும் பெரிய கையாகத் துதிக்கை அமைந்தது.

'அரதனக் கலச வியன்கரம் தாய்தந்தையர்க்கு ஆக்கி' என்ற தொடர் தாய் தந்தையரைப் பூசிக்கவே கையில் கலசம் அமைந்துள்ளது எனக் கூறும். துதிக்கை கையேயாயினும் மூக்கிற்குரிய மணத்தினை அறிதல், ஊற்றுணர்ச்சி போன்ற தன்மைகளையும் பெற்றிருக்கின்றது.

கைகள் :- பரிபக்குவம் அடைந்தோரே பற்றுதற்குரியகை பெருமான் கை என்பதனை

பக்குவம்முதிர்ந்த சிவபுண்ணிய நிரம்பிய
பாகம் பிறந்து சத்தி
பதிந்து வினையொப்புப் படுத்தவர்கள் பந்தநோய்
பற்றுமொரு செங்கை மலர்

எனவரும் தொடர்கள் தெளிவுறுத்தும். வலது பக்கத்துக் கீழ்க்கையில் உள்ள ஒடிந்த தந்தம் வானவர்களைக் காப்பதற்கானதாம். இது மகாபாரதம் எழுத எழுத்தாணியாக அமைந்தது. இக்கரம் அபய கரமாயிருப்பது. இக்கரமும் இதன்கண் உள்ள கொம்பும் எழுதுகோலாகவும் கல்வி பயிலுதற்கு அறிகுறியாகவும் நின்று நினைவாற்றலை வழங்கி வளர்ப்பதாகவும் அமைந்துள்ளது. இஃது எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்பதற்கேற்ப எண்ணவும் எழுதவும் வல்ல பேராற்றலினை ஒருங்கே பெறுதலை வலியுறுத்துகின்றது: அறிவை விரும்புவோர் கணபதி வழிபாடாற்றுதல் வேண்டும் என்பது இதனால் அறியப்படும். எழுத்தாணி படைத்தல் தொழிலை உணர்த்தும்.

(வளரும்)

# திருவிளையாடற் புராணம்

உரைநடை

பாண்டியன் ஐயங்கொண்டு நிற்றல்

அரிமருத்தன பாண்டியன், சோமசுந்தரக்கடவுள் ஒரு கூடை மண்ணைக்கொட்டி மறைந்தருளியதையும், அடைக்கலுற்ற கரை நீண்ட மலைபோல உயர்ந்ததையும், தன்னுடைய உடம்பிலே பிரம் படிபட்டதையும், ''என்மேல் அடிபட்டது! என்மேல் அடிபட்டது!'' என்று அமைச்சர் முதலாயினோர் ஒருவர்க்கொருவர் சுட்டிக்காட்டிப் பேசுவதையும், பிறர்பால் நிகழும் நிகழ்ச்சியையும் கண்டு மனத்திலே ஐயங்கொண்டு நின்றான்.

இறைவன் அசரீரியாகப் பாண்டியனுக்குக் கூறல்

அப்பொழுது மண்ணை உடைப்பினில் கொட்டி மறைந்து சென்றருளிய சோமசுந்தரக் கடவுள் ஆகாயத்திலே நின்று படை வீரரும் பிறரும் கேட்குமாறு பாண்டியனுக்கு மகிழ்ச்சிப் பெருக்கு உண்டாக அவனை நோக்கி, அசரீரி மொழியாக, ''செங்கோல் வழுவாத பாண்டியனே! உன்னுடைய பொருள்களெல்லாம் தரும வழியிலே தேடப்பட்டன; அவை தூய தன்மையுடையன; ஆகையால் அப்பொருள்கள் நமக்கும் நம்மையடைந்த அடியார்கட்கும் வாத வூரன் அன்புடன் வழங்கினன். அதனையுணராது நீ அவனை துன்புறுத் தினை; அது கண்டு நாம் காட்டிலுள்ள புலவு நாறும் வாயினையுடைய நரிகளையெல்லாம் குதிரைகளாக்கித் தந்தோம்! அவை யாவும் அன்றிரவில் நரிகளாய் மாறி ஓடின; மற்றயநாளும் அவனை நீ தண்டலாளரிடம் விடுத்துத் துன்பம் விளைவித்தனை: அதனைப் பொறாமல் நாம் வையையாற்றில் வெள்ளம் பெருகுமாறு செய்தோம்! வந்தியின் கூலி ஆளாய் வந்து அவள் கையிற் பிட்டினை வாங்கி யுண்டு பிரம்படியும் பட்டோம்! ஒரு கூடை மண்ணைக்கொட்டிக் கரையை உயரச்செய்தோம்! அந்த அன்னையின் துன்பத்தினை நீக்கி, அவளை எம்முலகை அடையுமாறு செய்தோம்! இவ்வளவும் நாம் செய்தது இவ்வாதவூரன் பொருட்டேயாம். இந்த மறையவன் தன்மையைச் சிறிதும் நீ அறிந்திலை. இவன் எம்மிடம் விருப்பம் வைத்ததால் உனக்கு இன்மையின்பத்தையும் மறுமையின்பத்தையும் தேடித்தந்த உத்தமன்; மாலை, சந்தனம் முதலாகிய புறப்பற்றினையும் அகப்பற்றினையும் விடுத்தவன். அவனை அவன் விருப்பத்தின்படியே

நடக்க விடுத்து, நீ மறைநூல் வழியே நின்று, நீதி மன்னவர்க்கு வரையறுத்த ஆயுள் நாள் குறைவுபடாமல் நிறைந்த செல்வத்திலே திளைத்து வாழ்வாயாக'' என்று கூறியருளினர்.

பாண்டியன் வாதவூரரைத் தேடியடைந்து வேண்டுதல்

இவ் வான்மொழிகள் பாண்டியனின் இரு செவிகளிலும் நிரம்ப அவன் அச்சமும் அதிசயமும் ஆனந்தமும் அடைந்து,' மெய்யன்பினை யுடைய வாதவூரர் எங்குச் சென்றார்' என்று பல விடங்களிலும் தானே தேடிச்சென்று கூடல் நாயகனின் திருக்கோயிலை அடைந்து, தம்விருப்பின்படியே சிவயோகத்தில் இருக்கும் வாதவூரடிகளைக் கண்டு வீழ்ந்து வணங்கி, ''ஐயனே! இந்நிலவுலகத்தினை ஆண்டு நரகத்தின்கண் அழுந்துதற்கு வல்ல என் புல்லறிவுக்கு ஏற்ற வண்ணமே உமக்குத் தீங்கு செய்தேன்; நீவிர் அடியேனது தவப் பயனாய் - அமைச்சராய் வந்து இம்மை மறுமைப் பயனுக்கும் காரண மாய்க் கொடிய பிறவிப் பிணிக்கும் அரிய மருந்தாயினீர். அடியேன் தேவரீரின் உயர்வினைச் சிறிதும் அறியாமல் செய்த பிழைகளை யெல்லாம் பொறுத்து முன்போலவே புவி அனைத்தையும் ஆளக் கடவீராக'' என்று இரந்து வேண்டினன்.

திருவாதவூரர் பாண்டியனிடம் விடைபெற்றுச் செல்லல்

மண்ணுலகத்திலுள்ள பற்றினை நீக்கிய வாதவூரடிகள் புன்னகை தோன்றப் பாண்டியனை நோக்கி ''அரசே! கடல் சூழ்ந்த உலக மனைத்திற்கும் ஆயிரங்கண்களையுடைய இந்திரனைப்போல் தனியரசு புரிவீராக! தங்களைச் சார்ந்து வாழ்வோர் தூய்மையுடையவரே. நான் தங்களை அடைந்த தன்மையினலே உலகியல், வேத நெறி என்னும் இரண்டையும் நன்கு தெளியப் பெற்றேன் அதனலே எனக்கு மனத்தூய்மை உண்டாகிப் பொய்த்தேவர்களை விடுத்து சிவனிடத்திலே அன்பு விளைந்தது; அவ்வன்பினலே மாயையின் விருத்தியாகிய உகை வாழ்க்கையின் நிகழ்ச்சியில் உண்டாகிய துன்பம் வெந்து நீறுகியது; சச்சிதானந்தப் பரம்பொருள் அருள் வடிவாகி வந்து தம்மை எனக்குக் கொடுத்துத் தம் திருவடியை எனது முடியிற் சூட்டித் தம்முருவமாக்கியது'.

'சச்சிதானந்தமாகிய அப்பரமசிவமே தமது இச்சையினலே உலக மனைத்தையும் படைத்துக் காத்து அழிக்கும் தொழிலையுடைய பிரமன், திருமால், உருத்திரன் என்னும் மும்மூர்த்திகளை

உண்டாக்கிய மேன்மையுடையவர்; பிறவித்துன்பத்திற்கு அஞ்சி வந்தவர்களுக்கு அழியாத இன்பத்தையுடைய வீடு பேற்றினைக் கொடுத்தருளுபவர்; உயர்வு ஒப்பில்லாத இத்திருவாலவாயுடையாரே, மந்தரமலை, கயிலைமலை, மேருமலை, ஸ்ரீபருப்பதம் (ஸ்ரீ சைலம்), காசி முதலாகிய இத்தலங்கள் தோறும் ஞானவடிவாகி அனைவர்க்கும் இம்மை மறுமை இன்பங்களைக் கொடுத்துக்கொண்டும் எம்மனோர் மனம் புறத்தே செல்லாமல் உள்ளத்தைத் திருத்திக்கொண்டும் வீற்றிருப்பவர். அவரே முன்னொருகாலத்தில் கண்ணுவர் முதலாய முனிவர்களுக்கு, வேதத்தின் உண்மைப் பொருளை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்க அருளிச்செய்தார். அவரே தமது ஞானாகாசமாகிய பொன்னம்பலம் என்னும் தில்லைப்பதியின்கண் வரும்படி அடியேனுக்குக் கட்டளையிட்டருளினார்.[1] ஆதலால் அங்கே அடியவன் போக உடன்படுவீராக'' என்று கூறிச் சோமசுந்தரக் கடவுளை வணங்கித் துதித்து விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டார்.

### பாண்டியன் வாதவூரரிடம் விடைபெற்றுத் திரும்புதல்

தம் பற்றினை அறுத்த பரமனார் திருவடியிலே பற்றுக் கொண்டு செல்லும் வாதவூரடிகளைப் பின்தொடர்ந்து பாண்டியன் சென்றான்; அப்போது வாதவூரடிகள் அரசனை ''நில்லும்; நில்லும்'' என்று கூறியும் பாண்டியன் கூப்பிடு தூரம் வரையில் நெருங்கிச் சென்று அடிபணிந்து விடைபெற்றுக்கொண்டு மீண்டனன்.

பின்னர், பாண்டியன் நகரினை அடைந்து திருக்கோயிலுட் புகுந்து சோமசுந்தரக் கடவுளைத் தரிசித்துத் தான் அடிக்குப்படி பிரம்பை நீட்ட முதுகு தந்தருளிய அருள் வெள்ளமாகிய இறைவன் மகிழுமாறு வீழ்ந்து வணங்கி, எழுந்து திருமுன் நின்று,

[2]அடையாளம் படவொருவன் அடித்தகொடுஞ் சிலைத்தழும்பும்
தொடையாக ஒருதொண்டன் தொடுத்தெறிந்த கல்லும்போல்
கடையானேன் வெகுண்டடித்த கைப்பிரம்பும் உலகமெலாம்
உடையானே! பொறுத்ததோ? உன்னருமைத் திருமேனி,

---

1. இங்கே, ''நாயினேனை நலமலி தில்லையுட் கோலமார்தரு பொதுவினில் வருகென'' (திருவாசகம் - கீர்த்தித் திருவகவல்) எனவும், ''வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச் சுண்ணப் பொன்னீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ'' (திருவாசகம் திருக்கோத்தும்பி) எனவும் வரும் அடிகள் சிந்திக்கற்பாலன.

2. ஒருவன் - அர்ச்சுனன். ஒருதொண்டன் - சாணக்கியனார்;

[1]கடியேறு மலர்மகன்மால் முதலாய கடவுளரும்
படியேறும் அளவிறந்த பல்லுயிரும் நீயையோ?
முடியேற மண்சுமந்தாய்! முதுகிலடி வடுப்பட்ட(து)
அடியேனும் பட்டேன்நின் திருமேனி ஆனேனே.

[2]கைக்குமருந் தின்சுவைபின் காட்டுமா றென்வினைக்கும்
பொய்க்குமரு மகனாகி மண்ணுண்டு புலைநரகம்
துய்க்குமருந் துயர்களைத்தான் மாற்றாய்நின் துணையடிக்கே
உய்க்குமருந் தவர்இவரென்(று) அறியாமை ஒறுத்தேனே.

[3]பாதியுமை உருவான பரமேட்டி! எனக்(கு) இம்மை
ஊதியமும் பரகதியும் உறுதிபெற விளைவிக்கும்
நீதியினால் மந்திரியாய் நின்னருளே அவதரித்த
வேதியரை அறியாதே வெறுத்துநான் ஒறுத்தேனே.

[4]மாயா விருத்தியினால் மாழாந்து மாதவரை
ஆயா(து) ஒறுத்தேன்; அருநரகத் தாழ்ந்துநான்
வீயாமல் இன்றனையார் மெய்ம்மையெலாம் தேற்றியஎன்
தாயானாய் தண்ணளிக்(கு) என்? தமியேன்செய் கைம்மாறே;

[5]நின்னையுணர்ந் தவர்வேத நெறிவேள்வி செய்தூட்டும்
இன்னமுதிற் கழிசுவைத்தோ இவளிடும்பிட்(டு)? எவ்வுயிர்க்கும்
மன்னவனே! செந்துவர்வாய் மலர்ந்தமுது செய்தனையால்;
அன்னையிலா உனக்கிவள்ஓர் அன்னையாய் வந்தாளோ?

---

1. கைக்கும் - கசக்கும், வினை - தீவினை, கலம் - மரக்கலம், புலை—புன்மை, அருந்தவர் - அரியதவமுடையவர். இவர் - வாதவூரர்;

2. கடி - வாசனை; மலர்மகன் - பிரமன்; படி - உலகம்; வடு தழும்பு.

3. பரமேட்டி - இறைவன். ஊதியம் - பேறு. வேதியர் - வாதவூரர்.

4. மாயா - மாயை, விருத்தி - செய்கை, மாழாந்து - மயங்கி, வீயாமல் - வீழாமல், தேற்றிய - தெளிவித்த.

5. ஊட்டும் - உண்பிக்கும், கழிசுவை - மிக்கசுவை; மன்னவனே—இறைவனே, அன்னை — தாய்.

[1]அன்றுசிறுத் தொண்டரிடும் பிள்ளைக் கறியமுதும்
மென்று சுவைதெரிந்த வேடன்இட்ட வூனும்போல்
நன்றுநரை யாட்டியிடு பிட்டும் நயந்தருந்தி
என்றும் அடியார்க்(கு) எளிவந்தாய் எந்தாயே!

[2]நரியாவும் பரியாக்கி நடத்தியும்அம் பரமன்றித்
தரியாயான் தருதுகிலைத் திருமுடிமேல் தரித்துமறைக்(கு)
அரியாய்நீ என்பாசம் அறுக்கவருந் திருமேனி
தெரியாதே பரிஆசை திளைத்திறுமா ந்(து) இருந்தேனே.

[3]விண்சுமக்கும் புள்ளாய் விலங்காய்ச் சுழன்றுமனம்
புண்சுமக்கும் சூழ்ச்சி வலியுடைய புத்தேளிர்
மண்சுமக்கும் மள்ளராய் வந்திலரே வந்தக்கால்
பண்சுமக்கும் சொல்லிபங்கன் பாதமுடி காண்பாரே.

என்று பலவாறு துதித்துத் தம்மை அடைந்த அடியவர்க்கு இவர் அன்பராம் என்றும், இவரைப் பெற்றால் இம்மை மறுமை இன்பங்களையும் முத்தி இன்பத்தையும் பெறுதல் எளிதாம் என்றும் கருதி, அன்று முதல் பல திருப்பணிகளையும் பூசை, திருவிழா முதலான வற்றையும் சிறப்புடன் செய்வித்து, வெள்ளியம்பலத்தில் மாறியாடிய திருவடிகளிலே பதிந்த அன்பும், உயிர்களிடத்து அன்பும் பெருக ஆட்சி செய்து கொண்டு வாழ்ந்து வந்தான்.

பாண்டியன் மகப்பேறும் சிவப்பேறும் பெறுதல்

இவ்வாறு அரிமருத்தன பாண்டியன் வாழுங் காலத்திலே அற நெறியால் ஈட்டிய தனது பொருள் முன்பு திருப்பெருந்துறைப் பெருமானிடத்தும், அவரடியாரிடத்தும் வாதவூரடிகளால் சென்று உடனே பல வகையாய்த் தழைத்து வரும் பயனே போலவும் பூரணச் சந்திரனைக் கண்ட கடல் பொங்குதல் போலவும் பலவகைப்பட்ட செல்வம் நாடோறும் மிக்கோங்கச் சகநாதன் என்னும் புதல்வனைப்

1. வேடம் – கண்ணப்ப நாயனார் ஊன்– மாமிசம், நரையாட்டி– வந்தியார்.

2. அம்பரம் - திசைவெளி, தரியாய் – உடுக்காத நீ, யான்ட இங்குப் பாண்டியன், மறைக்கு - வேதத்திற்கு.

3. புள்- அன்னம், விலங்கு-பன்றி புத்தேளிர்-பிரமன் திருமால், மள்ளர் - ஏவலாளர்; பண் சுமக்கும் சொல்லி - உமாதேவி.

பெற்றுச் சிறந்த மகிழ்ச்சிக்கடலுள் அழுந்தினுன். பிறகு அம் மகனுக்கு முடிதரித்து அரசனுக்கினுன்; வாதவூரடிகளாகிய அமைச்சரின் சார் பினுலே உண்மை நெறி விளங்கி, இருவினையொப்புப்பெற்று இறைவன் திருவருளால் ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும் மலங்களின் தொடர்ச்சி நீங்கிச் சிவானந்தக் கடலிலே மூழ்கிச் சோம சுந்தரக் கடவுளின் திருவடி நிழலை அடைந்தான்.

வாதவூரார் தில்லையை அடைந்து தரிசித்தல்

பாண்டிய நாட்டினின்றும் புறப்பட்டுச் சென்று வாதவூரடி கள், தம் பழுதற்ற பாடல்களை ஏற்றுக்கொள்ளும் இறைவன் எழுந் தருளியுள்ள பதிகள் பலவற்றையும் வணங்கிக்கொண்டு அந்தணர் மூவாயிரவரின் வேள்விப்புகை ஓங்கிநின்ற தில்லை என்னும் பழம் பதியினை அடைந்தார்; வீதிகள் தோறும் வீழ்ந்து வணங்கித் திருக் கோயிலிலே புகுந்து உண்மையான ஒளியும் அறிவும் இன்பமு முடைய இறைவரின் திருவடிவமாக விளங்கும் சிவகங்கையில் நீராடினுர்; திருமேனியில் ஒரு பாதியைப் பங்கிட்டுக்கொண்ட சிவகாமி அம்மையார் காண ஆனந்த தாண்டவம் செய்தருளும் இறைவனின் திருவருளாகிய கனகசபையைக் கண்டு காந்தத்தால் இழுக்கப்பெற்ற இரும்பைப் போல் இழுப்புண்டு சென்ருர். அன்று திருப்பெருந்துறையில் குருந்தமரத்தடியிலே தம்மை ஆட் கொண்டருளிய குருவடிவாகிய திருக்கோலமே அம்பலத்தின்கண் எதிரே தோன்றி 'வருக' என்று அழைப்பார்போல அழகிய திரு வாயின்கண் புன்னகை காட்டி நின்றருளிய நடராசப் பெருமானின் திருக்கோலத்தினைக் கண்டு அஞ்சலி செய்தார்; நிலத்தில் வீழ்ந்து ஐம்புலன்களையும், அந்தக்கரணங்களையும் கடந்து உண்மை அன் பின் வடிவமாயினர்; தில்லைவனமாகிய தாமரை மலரில் விளையும் சிவானந்தமாகிய தேனை வண்டுபோல வாரியுண்டார்; திருவாசகம் பாடி இன்பக் கூத்தாடினுர்; அழலிற்பட்ட வெண்ணெய் போல உள்ளம் உருகினுர்; பொன் மன்றினுள் ஆடும் இறைவனது திரு வாக்கின்படி அன்புடன் சென்று கீழ்த்திசையிலுள்ள அரிய தவத் தினர் வாழும் தபோவனத்தை அடைந்தார்; அங்கே, குறியையும் குணத்தையும் கடந்த ஒப்பற்ற ஆனந்தக் கூத்தரின் திருவுருவமாக விளங்கும் திருவைந்தெழுத்து[1] என்னும் வாளை[2] வீசி, ஐம்பொறிகள்

---

1. இங்கே, "ஆடும் படிகேணல் லம்பலத்தான் ஐயனே, நாடுந் திருவடியி லேநகரம் - கூடும், மகரம் உதரம் வளர்தோள் சிகரம் பகருமுகம் வாமுடியப் பார்" எனவரும் உண்மை விளக்கவெண்பா கருதற்பாலது.

2. இங்கே, "படைக்கல மாகவுன் நாமத் தெழுத்தஞ்செ ஞவிற் கொண்டேன்" என வரும் அப்பர்தேவார அடி சிந்திக்கற்பாலது.

அந்தக் கரணங்கள் என்னும் காட்டினை முற்றும் வெட்டி, மனமாகிய நிலத்தினைத் தூய்மை செய்து, அதனில் சிவமாகிய வித்தினை விதைத்து, ஆன்ம அறிவாகிய களையினைக் களைந்து, அருளாகிய நீரைப் பாய்ச்சி, அறிவே வடிவாய் விளைந்த சிவ போகமாகிய அமுதினை இடையறாமல் அருந்தி நின்றார்.

குறிகுணங்கள் கடந்ததனிக் கூத்தன்உரு
வெழுத்(து)ஐந்தின் நெடுவாள் ஓச்சிப்
பொறிகரணக் காடெறிந்து வீசிமனப்
புலந்திருத்திப் புனிதஞ் செய்து
நிறைசிவமாம் விதைவிதைத்துப் பசுபோதங்
களைந்(து)அருள்நன் னீர்கால் பாய
அறிவுருவாய் விளைந்ததனிப் பரானந்த
அமு(து)அருந்தா(து) அருந்தி நின்றார்.

அப்போது அத் தபோவனத்தின்கண் வாதவூரடிகள் அருட் கடல் இருந்த தோற்றம் போல வெண்ணீறணிந்து ஓவியம் போல அசைவின்றிச் சிவயோகம் செய்தருளுங் காலத்தில், மான்களின் கூட்டமும், புலிகளின் கூட்டமும் வந்து ஒருசேர நின்று ஒரு துறையில் நீர் அருந்தும்; பசுக்கள் கன்றென நினைந்து அவரை நக்கும்; அவர் கண்களினின்று வழியும் ஆனந்தக் கண்ணீரை அங்குள்ள பறவைக் கூட்டங்கள் வந்து பருகும்.

மூவாயிரவர் வாதவூரரைப் புத்தரோடு வாதிட அழைத்தல்

அக்காலத்திலே சில புத்தர்கள் இலங்கையினின்றும் சிதம்பரத்தை அடைந்து தில்லை மூவாயிரவருடன் ஏழுநாள் வரையறுத்துச் சபதங் கூறி வாது செய்வாராயினர். இந்த ஏழு நாட்களுக்குள் இப்புத்தர் களை வெல்லவேண்டுமென்று கருதிய தில்லை மூவாயிரவரது கனவில் கூத்தப்பெருமான் எழுந்தருளி, “நமது திருவாதவூரனைக் கொண்டு வாதஞ் செய்வீராக” என்று கூறியருளி மறைந்தார். மறையவர்கள் விழித்து அந்த ஞான மறையோரான வாதவூரர் இருக்கும் காட்டினை அடைந்து வாதுபுரிய வருமாறு அழைத்தனர். அப்பொழுது பொன்னம்பலத்தில் நடனமாடும் பெருமானின் அருள்வழிநிற்கும் வாதவூரார் அவ்வாறு செய்ய மறுத்தார். அம்மூவாயிரவரும் திரும்பி வந்து மனம் வருந்தித் துன்பக்கடலுக்குள் மூழ்கியிருந்தனர். மீண்டும் பொன்னம்பலத்தில் நடனமாடும் பெருமான் மறையவர்கள் கனவில் தோன்றி, “அவனை முன்னே திருபெருந்துறையில் குருந்த மரத்தடி யிலே ஆட்கொண்டருளிய முறையாலும், அவன் இனிய இசையுடன்

அமைந்த தமிழ்ப் பாட்டுக்களை மணி போல் பாடும் காரணத்தாலும் யாம் அன்றிட்ட பெயர் மாணிக்கவாசகன் ஆகும்; அப் பெயர் கூறி அவனை அழையுங்கள்; அவன் வருவான்'' என்று அருளிச்செய்தார்.

## வாதவூரர் புத்தர்களின் வாத சபையை அடைதல்

தில்லைவாழ்ந்தணர்கள் உறக்கம் நீங்கி எழுந்து சென்று வாதவூரடிகளை அடைந்து, ''மாணிக்கவாசக! வருக!'' என்று அழைத்தனர். பற்றறத் துறந்த வாதவூரடிகள் அதனையறிந்து, 'இறைவனின் அறக்கருணை இதுவோ?' என்று கருதி, அம் மூவாயிரவரோடும் புறப்பட்டுத் தில்லை நகரை அடைந்து பொன்னம்பலத்தில் ஆடியருளும் நடராசப் பெருமானின் திருவடிகளை வணங்கிக்கொண்டு திரும்பிப் பொன்மண்டபத்திலே புகுந்து அறிஞர் கூட்டம் நெருங்கிச் சூழ்ந்திருந்த சபை நடுவிலே இருந்தருளினர்.

## வாதவூரர் புத்தர்களோடு வாதிடல்

முன்னர் வாதவூரர், [1]சீவரப் போர்வையினையுடைய புத்தர்களை [2]வேறாக இருத்தி, ''உங்கள் கடாவினையும், நூலையும், அந்நூல் வழியில் நின்றவர் எய்தும் கதியையும் கூறுங்கள்'' என்றார். கனவிலும் திருநீற்றைக் காணாத புத்தர்கள், அம் மூன்று வினாக்களுக்கும் [3]உத்தேசம், இலக்கணம், சோதனை என்னும் மூவகையாலும் விரித்து விடை கூறினர். வாதவூரடிகள் அவர்கள் கூறியதைக் கேட்டு, காட்சியளவை ஒன்றினால் அவர்களே உடன்படுமாறு மறுத்துக் 'காட்சியளவை இன்றி ஏதுக்கள் இல்லை; ஆதலின், நீர் நிலை நிறுத்திய கடவுள் முதலிய மூன்று பொருள்களும் அனுமான அளவையாலும் நிலை பெறுவன அல்ல' என்று கூறியருளினார்.

---

1. சீவரப் போர்வை - மாந்தளிர் ஊறிய துவர் நீரில் தோய்ந்த போர்வை; கடுக்காய் நீரிலே தோய்த்த போர்வை எனினுமாம்.

2. இங்கு, வேறாகஇருத்தி என்றதைத் திருவாதவூரடிகள் புராணம், திருவெண்ணீறு இல்லாத புத்தர் முகத்தை வாதவூரார் பார்க்கலாகாது என இடையில் திரையிட்டதாகக் கூறுகின்றது.

3. உத்தேசம் - கூறும் பொருளைப் பெயர் அளவால் எடுத்தோதல்; இலக்கியம். இலக்கணம் - சிறப்பியல்பு: அஃது அவ்வியாத்தி, அதிவியாத்தி, அசம்பவம் என்னும் முக்குற்றங்களும் இல்லாத தன்மை, சோதனை - இலக்கியத்தில் இலக்கணம் உளவாதலை ஆராய்த்தல்.